1. Sprain will be relieved if twins are made to rub it down.
2. **Mantric** treatment with neem leaf or sacred ash or holy water has to be given if the child engages in non-stop crying.
3. When a child is afflicted by some disease through a woman who had an abortion it has to be cured by using **īṭu/yantra.**
4. Persons stung by venomous snakes and scorpion have to be treated with **neem** leaves.
5. Diseases like cholera, measles, etc. occur due to divine anger/dissatisfaction.
6. Diseases will be cured by offering tokens from parts of the body etc. to the gods.

v. Worship

In addition to the major deities worshipped by Brahmins, the non- Brahmins worship several minor deities, family-deities and clan- deities.

vi. Death

1. Lamp is lit and prayers are offered for three days in the place where the death had occured.
2. On the third day the food items favourite to the dead person will be offered during prayer.
3. On the sixteenth day religious rites are performed. Three types of pulses are boiled and offered without salt.
4. If death occurs on a Saturday, along with the corpse a chicken will also be buried.
5. If two crows fight each other in front of a house death will occur in that house.
6. The grinding stone is kept up-side-down in the house where the death had occured.

vii. Fasting

1. **Tiruvātirai festival:** This is celebrated during the Tamil month of **Mārkaḻi.** Longivity of the husband is the objective.

2. **'Sankaranti' festival**: This is celebrated during 'Bogi'. Objective of this is accumulation of wealth.

From the above, we are able to notice how each of the groups possess certain distinct beliefs in respect of different domains, as well as the impact of one on the other. Though there is a quantitative difference, there exists similarities in most of the beliefs and faiths found among social groups. Inspite of the modernisation taking place in the fields of social and national development, the attitudes of people towards beliefs and faiths remain as they had been but with varying degrees of rigidity. This is evidence to proove the dictum viz. 'customs and habits hardly die'.

REFERENCES

1. Akanāṉūṟu (ed.) — Saiva Siddhantha Works Publishing Co. Madras 1975
2. Encyclopaedia Britannica — - - - - - - - - - - - - (I Edition Vol.3) London. 1968.
3. Karunakaran, K. & Bagyalakshmi, R. — **Nāṭṭuppuraviyalāyvu Nerimuraikal,** ITFA: Annamalainagar. 1989
4. Karunakaran, K. & Jawaharlal Handoo — **Folklore of India,** Bharathiar University: Coimbatore. 1988
5. Lalitha Handoo — **Folk and Myth,** CIIL, Mysore. 1988
6. Naṟṟiṇai (ed.) — Saiva Siddhantha Works Publishing Co.: Madras. 1975
7. Sakthivel, S — **Nāṭṭuppuraviyal Āyvu,** Manivasagar Pathippagam: Chidambaram. 1983
8. Somale — **Tamiḻ Nāṭṭumakkaḷin Marapum Panpāṭum,** National Book Trust : Madras. 1981
9. Tolkāppiyar — **Tolkāppiyam,** SSWPC: Madras. 1978
10. Urdang, L. (ed.) — **The Random House Dictionary of the English Language,** Allied Publishers Ltd. : Bombay 1976

அறமும் அரசு பற்றிய கோட்பாடும் நடைமுறையும்

ஆ.க. ஆனந்தநாதன்

அரசியற் சிந்தனையாளர்கள் அரசியலைப் பல முறைகளில் ஆராய்கின்றனர். கடந்த கால வரலாற்றில் அரசு எவ்வாறிருந்ததென ஆராய்வது ஒரு வித முறை. அது எவ்வாறு இருத்தல் வேண்டுமென ஆராய்வது பிறிதொரு முறை. அது எவ்வாறு இருத்தல் வேண்டுமென ஆராயும் சிந்தனையாளர்களே மெய்யியலாளர்கள்;[1] பிளேட்டோ இந்தவகையில் முதன்மையானவர். இவர் அரசிற்கு இருக்க வேண்டிய சில முதன்மையான இலட்சணங்களை அடிப்படையாகக் கொண்டு தமது மெய்யியல் ஆய்வை நிகழ்த்தினார். அவ்விலட்சணங்களை நடைமுறையில் காணும் பொருட்டே தமது கற்பனையில் இலட்சிய அரசை உருவாக்கினார். பிளேட்டோ 'ரிப்பப்ளிக் (Republic) (பிளேட்டோவின் அரசியல்) எனவும், தாமஸ்மூர் 'உடோபியா' (Utopia) (கி.பி.1516) எனவும் தத்தமது இலட்சிய அரசுகளை உருவாக்கிக் காட்டினர். நீதியின் அடிப்படையில் பிளேட்டோ அவ்விலட்சிய அரசைக்காணவிழைந்தார். பிற்காலச் சிந்தனையாளர்களிற் பலர், பெரும்பான்மையோருடைய மகிழ்ச்சி[2] (Greatest happiness of the greatest number of peoples) என்னும் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு அரசியலை ஆராய்ந்தனர். வள்ளுவரும் பிளேட்டோ முதலான சிந்தனையாளர்கள் வரிசையைச் சேர்ந்தவர். திருவள்ளுவரும் பிளேட்டோவைப் போலவே அரசின் இலட்சணங்களை, அரசியல் மெய்யியலின் அடிப்படைப் பிரச்சினைகளான அரசு, இறைமை, அறம் அல்லது அரச நீதி, தண்டம், அரசிற்கும் குடிகளுக்குமிடையே இருக்க வேண்டிய தொடர்புகள் அதாவது மக்கள் ஏன் அரசுக்குக் கீழ்ப்படிய வேண்டும் போன்றவற்றை ஆய்கின்றார். இவற்றை அறத்தின் அடிப்படையில் எவ்வாறு விளக்குகின்றாரென்பதை ஆய்வதே இக்கட்டுரையாகும்.

பிளேட்டோ நீதியின் அடிப்படையில் அரசின் இலட்சணங்களைத் தனது குடியரசில் விளக்கும் போது அவரது காலக் கிரேக்க சமுதாய அமைப்பையும், அரசியற் பின்னணியையும் அறியாது பிளேட்டோவின் அரசில் மெய்யியற் கருத்துகளை எவ்வாறு எம்மால் விளங்கிக் கொள்ள முடியாதோ, அவ்வாறே திருவள்ளுவரது அரசியல் மெய்யியற் கருத்துக்களையும் விளங்கிக்கொள்ள அவர் வாழ்ந்த கால அரசியல் சமுதாயப் பின்னணிகளை அறிந்திருத்தல் அவசியமாகும். தமிழர்களது அரசியல் மெய்யியல் பற்றித் திருக்குறளே விரிவாகக் கூறுகின்றது. தமிழரின் அரசியற் சிந்தனையில் அரசு, நாடு ஆகியவற்றின் தோற்றுவாய் விளக்கப் படவில்லை. பொது மக்களின் நல்லெண்ணத்தில் வேரூன்றி, பொது மக்களின் நல்வாழ்விற்காகச் செயற்படுபவனாகத் தமிழரின் அரசன் காட்டப்படுகின்றான்.

சங்க காலத்திலே முடியரசே நிலவியது. முடியாட்சி முறை தமிழ் நாட்டிலே தொன்று தொட்டு வருவது. காத்தலையும் தண்டஞ் செய்தலையும் அரசர்க்குரிய சிறந்த கடமையாகத் தொல்காப்பியர் கூறுகின்றார். புலி புறங்காக்கும் குருளை போலவும், (புறம் 42) குழந்தையைப் பேணும் தாயைப் போலவும் (புறம் 55) குடிகளை அறத்தின் வழுவாமற் பாதுகாப்பது அரசர்க்குரிய காப்பு என சங்க இலக்கியம் கூறுகிறது. 'நெல்லும் உயிரன்று, நீரும் உயிரன்று மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' (புறம் 186) என்பதன் கருத்துயாதெனில் 'உயிரைக்காக்கும் நெல்லும் நீரும் உளவாவது மன்னன் முறைசெய்து காப்பின்' என்பதாகும். இதனைத் திருவள்ளுவர்,

'இயல்புளிக் கோலோச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு' (குறள் 545)

என்றார். காக்கப்படும் உயிர்க்குத் துன்பம் செய்யும் மக்களையும், விலங்கையும், பகைவர்களையும் அறஞ்செய்யாத அரசையும் தண்டித்தல் அரசனுக்குரிய கடமையாகும். இதனைத் திருவள்ளுவர்,

'குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில்' (குறள் 549)

என்பார். கொலைத் தண்டனையையும் வள்ளுவர் கூறுகிறார். (குறள் 550). எனினும் தண்டித்தலிலும் 'கையிகந்த தண்டம் கூடாது' என்கிறார். (குறள் 567) 'வெருவந்து செய்தல் ஆகாது' (குறள் 57-ஆம் அதிகாரம்) என்கிறார். 'கடிதோச்சி மெல்ல எறிக' என்கிறார். (குறள் 562)

தமிழர்களின் அரசியலில் அரசன் மக்களுடைய பிரதிநிதி அல்லன் அவன் தெய்வத்தின் அவதாரமாகவே கருதப்பட்டான். (குறள். 388) எனினும் அவன் மக்களுள் வேறானவன் அல்லன். அவனுடைய நிருவாகத்திலும் நீதியிலும் குடிமக்களுக்கு முழு நம்பிக்கை நிலவியது.

அரசனுடைய வெண்கொற்றக்குடை வெயில் மறைப்பதற்கில்லை, வருந்திய குடிகளினுடைய துன்பத்தை மறைப்பதற்காகும். (புறம். 35) சட்டம் இயற் றும் அதிகாரம் அவனுக்கில்லை. அறத்தையும் சமூக ஒழுங்கையும் பாதுகாப்பது அவனது கடமை. அவை அவனால் மாற்றபடுவன அல்ல. படைக்கப்படுவனவும் அல்ல. கடமையை நிறைவேற்றுவதிலே அவன் குடிமக்களுடை அன்பையும் ஆதரவையும் பெற்றான். அவன் காவலனே அன்றி ஆள்பவன் அல்லன். அதிகாரம் முழுவதும் அவனிடமே எனினும் அவன் குடிதழுவி அறிஞர்களினுடைய ஆலோசனைப்படியே நடந்து கொண்டான்.

இந்தப் பின்னணியிலே திருவள்ளுவர் அரசியல் மெய்யியலில் அரசிற்குரிய இலட்சணங்களை எவ்வாறு விளக்குகின்றாரென்பதைப் பார்ப்போம். அரசு ஏன் தோன்றியது? எப்போது எப்படித் தோன்றியது? சமூகத்திலே வல்லான் வகுத்ததே நீதியென்று வாழ்க்கை அரிதாய்விடவே, பெரிய மீனுக்குச் சிறிய மீன் இரையாகிவிடாமல் தடுக்கவும், தனிமனிதனின் ஆசைக்குச் சமூக நலன் பலியாகாமற் பார்க்கவும் ஒரு தாபனம் தேவையானபோது, தெய்வசம்மதத்தால் அல்லது மக்கள் சம்மத ஒப்பந்தங்களால் அரசன் தோன்றினானென்று தொடங்கி வள்ளுவர் அரசியல் மெய்யியலாய்வு நடத்தவில்லை. அரசன் இருக்கிறான், அவனுக்கொரு நாடிருக்கிறது, அதிலே குடிமக்கள் வாழ்கிறார்களென்ற யதார்த்தத்தின் மீதே வள்ளுவர் தமது கொள்கையை வகுக்கிறார். கற்பனை ஊகங்களிலே அவர் சஞ்சரிக்கவில்லை. சங்ககாலச் சமூக வாழ்வை அவர் எதிரொலிக்கிறார். அக்கால அரசியல் எண்ணங்களையும் இலட்சியங்களையும் அவர் பிரதிபலிக்கிறார்.

அரசு என்பதற்குத் திருவள்ளுவர் வகுத்த வரைவிலக்கணத்தை ஆராயுமிடத்து அவருடைய விரிந்த அரசியல் அறிவும், பரந்த மனப்பான்மையும் தெற்றெனத் தெளிவுபடும். அது முழுமையும் முதிர்ச்சியும் எய்தப்பெற்று ஓர் ஒப்பற்ற முற்போக்குக் கொள்கையைத் தன்னகத்துக் கொண்டுள்ளதென்பதை , அதனை ஆராய்ந்த அரசியல் மெய்யியலாளர் அறிவிக்கின்றனர். அரசு அரசாக விளங்க வேண்டின் அதற்குப் பல்வேறு உறுப்புக்கள் இன்றியமையாதன. அவற்றுள் ஒன்று குறையினும் அரசு தன் உருவிழந்து நிற்கும். இக்கால அரசியல் நூல்களில், அரசுக்கு இன்றியமையாத அம்சங்களாகக் கூறப்படுவன நான்கு.[3] ஒரு குறித்த எல்லையைக் கொண்ட நிலப்பரப்பு, மக்கள், அரசாங்கம், இறைமை என்பன திருவள்ளுவர் வகுத்த அரசுறுப்புக்கள். மேற் கூறப்பட்டவற்றிலும் மிக விரிவானவை,அவர் தமது அரசியலில் முதற்குறள் ஒன்றிலேயே அரசிற்கின்றியமையா உறுப்புக்கள் ஆறினை மிக எளிதாய் எடுத்தியம்பியுள்ளார். அவையாவன ஒரு குறித்த எல்லைகளையுடைய நிலப்பரப்பு அல்லது நாடு, ஒழுங்காகவும் அமைதியாகவும் வாழ்க்கை நடத்தும் குடிமக்கள், அரசாட்சி அல்லது பொறுப்புள்ள ஆட்சித்தலைவன், அமைச்சரவை, பொருள் அயல்நாட்டு நட்பு, தற்பாது காப்புப்படை, அரசன் ஆகியவை.

உலகத்திலுள்ள உயிர்களெல்லாம் வானத்தின் வண்மையிலே தங்கி வாழுமாறே, நாட்டுக் குடிமக்களெல்லோரும் ஆட்சியாளர்களின் செங்கோலின் கண்மையிலே தங்கி வாழ்கின்றனர். அந்தணர் போற்றும் அறநூலுக்கும் ஏனையோர் ஏற்றும் அறத்திற்கும் ஆதியாய் நின்று உலகத்தை ஆதரிப்பது அரசாட்சியேயாகும். ஆட்சித் தலைவன் முறைப்படி நாட்டைக் காவானாகில் பசுக்கள் பால் தருதலாகிய பயன் குன்றும், அந்தணரும் அறநூல்களை மறப்பர், குடிகளின் அறிவும் குன்றும். மழைத்துளி இல்லாதிருத்தல்

உலகத்திற்கு எத்தன்மைத்தோ, ஆட்சித்தலைவனின் அருளில்லாவாட்சி நாட்டு மக்களுக்கும் அத்தன்மையுடையதாகும். ஒரு நாட்டில் எவ்வகைச் செல்வச் சிறப்புக்கள் தாம் இருப்பினும் நல்லரசாட்சி இல்லாதொழியின் அச்சிறப்புக்களால் எவ்வகைப் பெருமையும் பெறலரிது. இவ்வாறு ஒரு நாட்டு மக்களின் நல்வாழ்விற்கு அரசாட்சி இன்றியமையாதது எனக் கூறுகின்றார்.[5]

திருவள்ளுவர் அரசியலில் ஒழுக்கத்தை உணர்த்துகின்றார். சமய ஞானத்தைத் தருகின்றார். ஆனால் அந்த ஒழுக்க உணர்வையும் சமயவறிவையும் அரசியலுக்கு அடிப்படையாக வலியுறுத்துகிறாரென்பதை நாம் கருதுவதில்லை. வெறும் ஒழுக்க நூலாக மட்டும் கருதப்பட்டது நமது துரத்திஸ்ட்டமேயாகும். ஒழுக்கமும் சமயமும் அரசியலால் அரண்செய்து பாதுகாக்கப்படுவனவாகும். 'மக்களுக்கு உணவின்றி உடல் நிலையாவாறு போல அரசியல் நீதியான் அன்றி உலக ஒழுக்கம் நிலைபெறாது' என்கிறார். ஏனென்றால், ஒழுங்கு முறைதவறி, எவரும் அறவாழ்க்கைக்கு ஊறிழைக்கும் பாழான செயல்களைக் கருதாவண்ணம் படைவலிகொண்டு தடுத்து அறத்தைப் பாதுகாப்பது அரசு.

திருவள்ளுவர் அறம் என்று கூறும் போது உலகியல் ஒழுக்கத்தை மட்டுமே குறிப்பிடவில்லை. அரசியல்முழுவதையுமே அவர் அறம் என்று பேசுகிறார். பலரும் கருதுவது போல விதித்தன செய்தல் விலக்கியன ஒழித்தல் மட்டும் அறம் அன்று; அல்லது காலத்திற்கேற்ற உலகநடை மட்டும் அறமன்று; மனத்துக்கண்மாசிலனாதல் மட்டும் அறமன்று; மக்கள் வாழ்வாங்குவாழும் வகைமைக்கு ஏதுவான கருவியே அறம். அதுவே அரசியல் ; பொருளும் இன்பமும் அதன் பயனேயாகும். திருவள்ளுவரின் அரசியலுக்கு அன்பும் அறமுமே அடிப்படையாகும். அங்கே வன்முறை (இம்சை), மறம் (பலாத்காரம்) என்பன இல்லை. மேலும் மனிதனுடைய அன்றாட வாழ்வினின்றும் அரசியலைத் தனியாகப் பிரித்து வள்ளுவர் பேசவில்லை. எவ்வாறு சமயமானது வாழ்க்கையோடு ஒட்டியதாய் இருக்கின்றதோ அவ்வாறே அரசியலும் வாழ்க்கையை யொட்டியது. தனிமனிதனின் நலன் வேறு, அரசியல் நலன் வேறு அல்ல என்பது வள்ளுவரது கொள்கையாகும்.

திருவள்ளுவரும் பிளேட்டோவைப் போலவே, அரசிற்கும் அடிப்படை மெய்மைகள் உண்டென்கிறார். ஒப்புரவு, வாய்மை, கொல்லாமை, அன்பு டைமை, ஒழுக்கம், அருள், புகழ், ஈகை, நடுவு நிலைமை முதலானவை அவற்றுட்சிலவாகும். இவற்றையே அவர் அறம் எனத் தொகுத்துக் காணுகின்றார்.

'தள்ளா விளையுளும் தக்காரும் தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு' (குறள் 731)

என்னும் குறளில் வள்ளுவர் தக்காரைக் குறிப்பிடுவது தகுதி என்னும் நடுவுநிலையை வற்புறுத்தும் பொருட்டாகும். தாழ்விலாச் செல்வரைக் குறிப்பிடுவது ஒப்புரவு, ஈகை முதலாயவற்றை வற்புறுத்தும் பொருட்டாகும். மாறாது விளையும் விளைச்சலும் தகுதியால் சிறந்தகல்வியும் ஞானமும் உடைய சான்றோரும் நாளும் யாவர்க்கும் ஈயக் குறைவுபடாத செல்வம் உடையோரும் செறிந்து இயல்வது நாடு[6] என்னும் உரை இதனைத் தெளிவுபடுத்துகிறது.

இவ்வையகத்தின் கண்ணே உயிரினங்களெல்லாம் மழையின் தண்மையிலேயே தங்கி வாழ்கின்றன. அதேபோல ஒரு நாட்டின் குடிகள் அந்நாட்டு ஆட்சியாளரின் செங்கோலின் வண்மையிலேயே தங்கிவாழ் கின்றனர். ஆட்சியாளர் குடி தழுவிக் கோலோச்சுவர்; மக்களை முறைசெய்து காப்பர். குடிகளைப் பிறர் ஒடுக்காமற்காக்கவும் வேண்டும். குடிகள் செய்யும் குற்றங்களை நடுவுநிலையினின்று ஆராய்ந்து அவரவர் ஆற்றிய குற்றங்களுக்கு அளவான தண்டனைவிதித்து அவற்றால் வரும் தொல்லை களிலிருந்தும் நாட்டைக் காத்தல் ஆட்சியாளரின் கடமையாகும். உழவன் தன் வயலின் கண் நெற்பயிரின் வளர்ச்சிக்கு இடையூறாய் நிற்கும் களையைக் களைந்து பயிரைப் பாதுகாத்தல் போன்று குடிகளுக்கு இடுக்கண் விளையுமாறு வாழும் குற்றவாளிகளை ஒறுத்தல் ஆட்சியாளரின் கடமையாகும். குடிகள் கேட்டவிடத்தும் அவர்களது குறைகளைத் தீர்ப்பதிலும், ஆட்சியாளர் தாமாகவே நாட்டிலுள்ள அநீதியை ஆராய்ந்து அவரவர் குறைகுற்றத்திற்கு ஏற்றவாறு முறை செய்து குடிகளைக் காத்தல் வேண்டும். இத்தகைய ஆட்சியாளர் மக்களுக்கு இறையாவார்கள். அரியணையில் அமரும் உரிமை ஆட்சியாளர்க்கு அதிகார முறையாலோ, பிறப்பு வழியாலோ, இறைவழியாலோ பெறப்பட்டதன்று. கடமையாற்றான் பெற்றதாகும். அவர் குடிகளுக்குத் தாம் ஆற்றுவதற்குரிய கடமையாகிய தொழில் கெடாமல் கண்ணோட்டம் உடையராய் இருப்பாராகில் அஃதே அவர் தம் அரசுரிமைக்கு ஏற்ற ஏதுவாகும்.

முடிமன்னனுக்கென்று வகுத்துக்கூறிய அவருடைய நெறிமுறைகள் குடி மக்கட்கு உரியவையாக உள்ளன.

'குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு' (குறள் 544)

என்றும் கூறும் போது 'மன்னன்' என்பதை மட்டும் விட்டுவிட்டு வேறு சொல் கூறுவோமானால் இன்றைய குடியாட்சியிலே எந்த நாட்டுத்

தலைவனுக்கும் அது பொருத்தமான ஒன்றாக இருக்கிறது. குடிதழீஇக் கோலோச்சும் ஒருவனுக்கு, குடிமக்களைத் தழுவி ஆளுகின்ற ஒருவனுடைய ஆணைக்கு, இந்த உலகம் கட்டுப்படும். அவனை இவ்வுலகம் போற்றும் என்று சொல்கின்ற இக்கருத்து ஆழ்ந்து சிந்திக்கத்தக்கதாகும். சூது வேண்டாம். குடிக்காதேஎன்பன எல்லாம் அறத்துப்பாலில் சேரத்தக்கவை அல்லவா? புத்தர் பேச வேண்டிய பொன்மொழிகளை இங்கே அரசியல் தலைவர் ஏன் பேச வேண்டும்? இப்படியெல்லாம் எண்ணிப்பார்க்க இடம்தருகின்றது. ஆகவே திருவள்ளுவர் பிளேட்டோவைப் போல நன்கு சிந்தித்துப் பார்த்துள்ளார்.[8] நல்ல குடிகளாய் மக்கள் இல்லையானால் நல்லாட்சி நடைபெறாதென்ற கருத்திற்கு அவர் அரண் செய்துள்ளாரென்று தோன்றுகிறது. அரசன் நல்லவனாக இருந்தால் மட்டும் நாடு எல்லாம் நன்றாகிவிடும் என்பதில்லை. குடிமக்களும் நல்லவர்களாக விளங்க வேண்டுமென்றால் இந்தக் குற்றங்களுக்கெல்லாம் இந்த ஆட்சி இடம்தரக் கூடாது என்பது போன்ற ஒரு தெளிவு திருக்குறளில் பிறக்கின்றது.

"அறம்" என்ற தமிழ்ச்சொல் வாழ்வின் அடிப்படை ஒழுககத்தைக் குறிப்பதாகும்.[9] அறம் என்பது ஒழுங்கு எனப் பொருள் படுமாயின் திருக்குறள் அனைத்துமே அறத்தைக் கூறுவனவாகும். ஒவ்வொருவருக்கும், ஒவ்வொன்றிற்கும், ஒவ்வொரு செயலுக்கும் ஓர் ஒழுங்கு முறை (தருமம்) காட்டப்பட்டுள்ளது. அரசியலில் இவ்வொழுங்கை நிலைநாட்டி முறைசெய்ய அரசிற்கு இறைமை இன்றியமையாதது; அறக்கோட்பாட்டைச் சமூகத்தில் நிலைநாட்ட இது அரசிற்கு அவசியமாகத் தேவைப்பட்டது. அரசன், அரசியலில் பல்வேறு அம்சங்களுக்கு மட்டுமே நடுநாயகமாக நிற்பவன் அல்லன். சமுதாயம் முழுமைக்கும் அடிப்படையாக நிற்பவன். அறத்தையும், ஒழுக்கத்தையும் அடிப்படையாகக் கொண்டுதான் சமுதாயம் அமைய வேண்டுமென்பது திருவள்ளுவர் கொண்ட அடிப்படையான உண்மை. சமுதாயம் ஒரு வகையில் அரசனை அடிப்படையாகக் கொண்டு விளங்கியதென்றால், மறுவகையில் அறத்தை ஆதாரமாகக் கொண்டு விளங்கியது; சமுதாயத்தையும் அறவொழுக்கங்களையும் ஒன்றாகப் பிணைத்திருக்கும் பாலம் இறைமைக் கோட்பாடுதான். அரசன் என்னும் கோட்பாட்டில் தவறோ, சிறுமையோ நிகழ்ந்து விட்டால், அறவொழுக்கங்கள் இல்லாத சமுதாயமும், பின்பற்றப்படுவதற்குச் சமுதாயம் என்று ஒன்று இல்லாத அறவொழுக்கங்களும் பயனற்றவை. ஆகவேதான் திருக்குறளில் இறைமைக்கு இத்துணை முக்கியத்துவமும் சிறப்பும் அளிக்கப்படுகின்றது.

முந்நூற்றெண்பது குறள்களிலே அறிவுறுத்திய அந்த அறநெறி பொருட்பால் முழுவதும் ஊடுருவியுள்ளது. ஆனால், அரசியலுக்கு ஏற்றவாறு அதை ஓரளவு மாற்றியமைத்திருக்கின்றாரென்று கூறலாம். அறநெஞ்சம்

அவரைவிட்டு நீங்கவில்லை. 'வினைத்தூய்மை' என்ற ஒரு அதிகாரம் சிறந்த எடுத்துக் காட்டாகும். செய்யும் செயல்கள், தூயசெயல்களாக இருக்க வேண்டுமென்று கூறுகின்றார். நீ பிறரை அழவைத்துத் தேடும் செல்வம்அது உன்னை அழ விட்டு ஓடிப்போகும் என்கிறார். 'அழக்கொண்ட எல்லாம் அழப்போம்'ஏதோ ஒன்றை நம்புகிறார். ஓர் அறத்தின் கட்டளை இருக்கின்து. அறம் கொல்லும் என்றும் அறம் சூழும் சூழ்ந்தான் கேடு என்றும் கூறும் கொள்கைகளை மறக்காத நெஞ்சினராக இங்கே விளங்குகின்றார். 'சலத்தால் பொருள் செய்து ஏமார்த்தல்' வேண்டாமென்று கூறுகின்றார் நன்மைகளை எப்படியாவது பெற வேண்டுமென்ற அரசியல் போக்குக்கு மாறாக இருக்கின்றார் திருவள்ளுவர்.

படையும், படைமாட்சியும் இகலும் எல்லாம் கூறிய பிறகு அதே திருவள்ளுவர் இவ்வாறு கூறுகின்றாரே என்று எண்ணும் போது வியப்பாக உள்ளது. ஆனால், தகாத வழியிலே ஒரு செயலைச்செய்து, வஞ்சனையான ஒரு செயலைச் செய்து, அறநெறிக்கு மாறுபட்ட மாசான ஒரு செயலைச் செய்து அதனால் அரசியலில் பெரு நன்மையைப் பெறலாம் என்று விரும்பினால், 'வேண்டாம் அந்த நன்மை' என்று கூறுவார் போல 'வினைத்தூய்மை' என்ற அதிகாரத்திலே 'பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர் கழிநல்குரவே தலை' என்று கூறுகின்றார். பழியான வழியிலே பெறுகின்ற ஒரு பெரிய ஆக்கத்தை விட, நன்மையை விட, சான்றோர்கள் போற்றுகின்ற நெறியில் வாழ்ந்து வறுமையை மேற்கொண்டு வாழலாம் என்கின்றார். ஒருநாடு ஏழைநாடு என்று சொல்கின்ற ஓர் அரசன் தன் நாட்டை ஆண்டுகொண்டு ஆனால் தன் குடிமக்களை மட்டும் நல்லவர்களாக வைத்திருப்பானானால் அத்தகைய அரசனைத் திருவள்ளுவர் போற்றுவார் போல் தோன்றுகிறது. 'ஈன்றாள் பசிகாண்பான் ஆயினும் செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை' அற உலகத்திலே வாழ்கின்ற சான்றோரைத் தான் திருவள்ளுவர் இங்கே கொண்டுவந்து மீண்டும் காட்டுகின்றார். உன்னுடைய பெற்ற தாய் பசித்திருப்பாளானாலும் கூட, வேண்டாமென்று இந்த உறுதியையும் வலியுறுத்துகின்றார். ஆகவே தீயவர்களைக் கொல், நாட்டில் தகாதவர்களை ஒழித்துவிடு என்று கூறிய திருவள்ளுவர் உனக்கு உன்னுடைய நாட்டின் ஆட்சியிலே வலிமையான ஒரு பகைவருமானால் கொஞ்சம் பொறுத்திரு, விட்டுக்கொடுத்திரு, ஆனால், அதனுடைய பகை அவ்வளவுவலிமையாக இல்லை என்றால் தீர்த்துவிடு ஒரேயடியாக என்று சொல்கின்ற திருவள்ளுவர், இங்கே தகாதவழியிலே சென்று நீ பெறுகின்ற ஆக்கத்தை விட அதை இழந்து துன்பப்படுவதே மேல் என்று வற்புறுத்து வாரானால், எப்படித்தான் இவரது கொள்கையை இயைபு படுத்துவதென்பதை எண்ணிப் பார்க்க வேண்டும்.

திருவள்ளுவரின் அரசியற் கருத்துகளில் சிலவற்றையே இங்கே கண்டோம். அறம், இறைமை, நாடு, அரசு போன்றவற்றின் அடிப்படைக் கருத்துகளையும் , குறிக்கோள்களையும்,அவற்றைச் சமூகம் பின்பற்ற வேண்டிய தேவையையும், பின்பற்றினால் வரும் இன்பத்தையும் பயனையும் எல்லா மக்களுக்கும் விளக்கினோம். திருவள்ளுவரின் அரசியலை ஓர் ஒழிக்கவியலாகவோ. அதாவது மனிதப் பண்பாடு நடத்தைகள் பற்றி ஆராயும் ஒரு சிறந்த மெய்யியலாக்வோ கருதுவது மிகவும் சிறந்தது. திருக்குறள் சமஸ்கிருத மொழி நூல்களில் சிறந்ததாகக் கருதப்படும் அர்த்த சாத்திரம், கிரேக்க மொழியிலுள்ள பிளேட்டோ (Republic), அரிஸ்டாட்டில் (Politics), மக்கியவில்லி ("Prince"), கொப்பின் லெவியாதான் (Mill on Refresehtative Government) (மல்லின் பிரதிநிதித்துவ அரசாங்கம்) ஆகியோர் நூல்களோடு ஒப்பிடும் போது, ஏதாவது ஒருவர் மற்றொருவரின் கருத்துக்களைத் தழுவியிருப்பது போலவோ அல்லது ஒருவரது கருத்தோடு மற்றொருவரது கருத்து ஒற்றுமை யேற்பட்டால் அதைக் கொண்டு ஒருவர் மற்றொருவரின் கருத்துக்கு வித்திட்டிருக்கலாம் அல்லது ஆதிக்கம் செலுத்தி இருக்கலாமென்றோ ஊகித்து ஆதாரமற்ற கருத்துக்களைக் கூறுவதில் ஒருவிதப் பயனும்மில்லை இந்நூல்களெல்லாம் ஒரு தனிக்கருத்து ஒரு குறிப்பிட்ட குறிக்கோள் அல்லது இலட்சியத்துக்காக எழுதப்பட்டவையாகும். உதாரணமாக அரத்தசாத்திரம் ஒரு நாட்டை யார் ஆளவேண்டும். அது எவ்வாறு ஆளப்படவேண்டும், பல்வேறு ஆட்சித்துறைகளை எவ்வாறு அமைக்க வேண்டும், இறை வசூலிப்பது எப்படி, குற்றவாளியை எவ்வகையில் தண்டிப்பது, அரசு ஊழியர்களைத் தேர்ந்தெடுப்பது எவ்வாறு, இலஞ்சம் எத்தனை வகைப்படும், இவை போன்ற நிர்வாக நிறுவனவமைப்பைக் கூறும் ஆட்சியியலாகவும் இயங்குகின்றது. திருக்குறள் அத்தகைய விவகாரங்களில் அதிகமாகத் தலையிடவேயில்லை. திருக்குறளில் ஆட்சிக் கலைக்கு அதிக இடமில்லையென்றே கருதலாம். ஒரு வேளை ஆட்சிக் கலையின் அமைப்பையும் .நடைமுறையையும் விரிவாகக் கூற முற்பட்டால் அரசியலின் அடிப்படைத் தத்துவங்களின் முக்கியத்துவம் குறைந்துவிடுமெனக் கருதி, திருவள்ளுவர் அவற்றிற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லையோ? அது போன்றே தமிழகத்தில் அன்று நடைமுறையில் இருந்தஅல்லது வள்ளுவர் கருதும் சட்டம் யாது, சட்டத்தின் அதிகாரம் யாது என்பவை போன்ற கருத்துகளைக் எம்மால் காணமுடியவில்லை. எனவே திருக்குறள் ஓர் இலட்சிய நூல்; மற்றவை செயல் முறைக்குகந்த நடை முறையைக் குறிப்பிடும் நூல்களேயாகும்.

இன்னும் கூறப்போனால் திருக்குறள் கூறும் அறம், அறம் போன்ற கருத்துகளுக்குச் சமஸ்கிருத மொழி இலக்கியங்களில் வரும் தருமம் (Dharma), பிளேட்டோ கூறும் நீதி (Justice) போன்ற கருத்துகளையும் சமமானதாக ஒப்பிட்டுக் கூறியதில் குறையொன்று மில்லாதிருந்த போதிலும்,

பிளேட்டோ[10] அழுத்தம் திருத்தமாகக் கூறிய சாக்கிரட்டீஸின் சீரிய, தத்துவமான 'Virtue '(ஒழுக்கம், நன்மை, நலம், நேர்மை, தகுதி, நற்குணம் முதலியன) 'Virtue is Knowledge' என்பதோடு, அரசியல் மெய்யியலின் தந்தையாகப் போற்றப்படும் அரிஸ்டாட்டில் கூறிய "The Idia of the Good" "Good life" போன்ற கருத்தை ஒப்பிடுவது மிகவும் சிறந்ததாகும். 'Virtue', 'Good' என்ற பொருளில் அறம் என்ற கருத்தைக் கொள்வோமானால், ஒரு நாடு மக்களின் அறவாழ்க்கைக்கு மிகத் தேவை என்பதை அறியும் போது திருவள்ளுவர் அரசியல் மெய்யியலின் தந்தையாகிய அரிஸ்டாட்டிலையும் மிஞ்சிவிடுகின்றார். திருவள்ளுவரைப் பிற அறிஞர்களோடு ஒப்பிட முற்படும்போது இவ்வடிப்படைக் கருத்துகளையும் மனத்திற் கொள்ளுதல் வேண்டும்.

அடிக்குறிப்புகள்

1. Political Philosophy Antony Quinton, pp. 20-22 (1967)
2. The State in Theory and Practice, H.J. Laskai, London, George Allen & Unwin Ltd., 1935
3. அரசியல் கோட்பாடுகள், என்.ஜீ. இராஜகோபால், புக்ஸ் (இந்தியா) பிரைவேட் லிமிடெட், சென்னை, 1960. பக் 30-31
4. படை, குடி,கூழ், அமைச்சு,நட்பரண், ஆறும
   உடையான் அரசருள் ஏறு : (குறள்.381)
5. வானோக்கி வாழும் உலகெல்லாம் மன்னவன்
   கோல்நோக்கி வாழும் குடி (குறள் 542)

   அந்தணர் நூற்கும் அறத்திற்கும் ஆதியாய்
   நின்றது மன்னவன் கோல் (குறள் 543)

   ஆபயன் குன்றும் அறுதொழிலோர் நூல்மறப்பர்
   காவலன் காவான் எனின் (குறள் 560)

   துளியின்மை ஞாலத்திற்கு எற்றற்றே வேந்தன்
   அளியின்மை வாழும் உயிர்க்கு(குறள் 557)

   ஆங்கமை வெய்தியக் கண்ணும் பயமின்றே
   வேந்தமை வில்லாத நாடு (குறள்740)
6. நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
   நாட வளந்தரு நாடு (குறள் 739)

உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும்
சேரா தியல்வது நாடு (குறள் 755)

7. ஓர்ந்து கண்ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்து செய்வதே முறை (குறள் 541)

இறைகாக்கும் வையக மெல்லாம் அவனை
முறைகாக்கும் முட்டாச் செயின்(குறள் 547)

குடிபுறங் காத்தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் தொழில் (குறள் 549)

முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும் (குறள் 388)

நாடொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாடொறும் நாடு கெடும் (குறள் 553)

கொடையளி செங்கோல் குடியோம்பல் நான்கும்
உடையானாம் வேந்தர்க் கொளி (குறள் 390)

கடுமொழியும் கையிகந்த தண்டமும் வேந்தன்
கடுமுரண் தேய்க்கும் அரம் (குறள் 567)

8. பிளேட்டோவின் அரசியல் அல்லது நீதியை பற்றிய ஆராய்ச்சி, வெ. சாமிநாத சர்மா, பிரபஞ்ச சோதிப் பிரசுராலயம், புதுக்கோட்டை, 1964, பக். 118.

9. 2-ஆம் அனைத்துலக தமிழாராய்ச்சி விழா மலர். P/1 The concept of Justice in Tirukkural by M. Shanmugasubramaniam

10. மேல்நாட்டு அரசியல் கோட்பாடுகள், சூரிய நாராயணன் தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1976, பக் 19-20

உசாத்துணை நூல்கள்

1. அரசியல், இராசகோபாலன், தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், சென்னை, 1960.

2. இரண்டாம் அனைத்துலகத் தமிழாராய்ச்சி விழா மலர், சென்னை, 1968

3. சாந்திபர்வம் (மகா பாரதம்) 15, 4-9, கணபதிசாஸ்திரிகள் 1912. Printed at the Vaijayanti Press, 32, Mount Road, Madras.

4. திருக்குறள், பரிமேலழகர் உரை, கழக வெளியீடு, சென்னை, 1967.

5. பதினெண்கீழ்க்கணக்குச் சொற்பொழிவுகள்; கழக வெளியீடு சென்னை 1, 1966.

6. பல்கலைப்பழந்தமிழ்; (பொதுப்பதி)சஞ்சீவி.ந., சென்னைப்பல்கலைக்கழக வெளியீடு, 1974.

7. பிளேட்டோவின் அரசியல் அல்லது நீதியைப் பற்றிய ஆராய்ச்சி; (மொழி) சாமிநாத சர்மா, வெ., பிரபஞ்சசோதிப் பிரசுராலயம், புதுக்கோட்டை, 1964.

8. மேல்நாட்டு அரசியல் கோட்பாடுகள், சூரியநாராயணன், தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம், 1976.

9. Political Philosophy: Antony quinton, Oxford University Press, 1967.

10. The State in Theory and Practice: H.J. Laski, London, George Allen & Unwin Ltd, 1935.

வல்லிபுர் விஷ்ணு ஆலயம் : ஒரு வரலாற்றாய்வு

செ. கிருஷ்ணராசா

இன்று தமிழ் மக்களது வரலாற்றுத் தொடர்ச்சியைத் தேடிக் கண்டறிய வேண்டிய ஒரு பெரு முயற்சியில் ஆய்வாளர் ஈடுபட்டுள்ளனர். இச்சூழலில் யாழ்ப்பாணப் பகுதியில் மேற்கொள்ளப்படும் பழைய நகரங்களைப் பற்றிய முதனிலையாய்வுகளும் அகழ்வாய்வுகளும் பல புதிய கருத்துகளையும் சான்றுகளையும் தருபவையாக அமைகின்றன. அச்சான்றுகளின் அடிப் படையில் பழைய யாழப்பாணத்தின் வரலாற்றுத் தொடர்ச்சியைக் கண்டு கொள்ளும் வாய்ப்பும் ஏற்பட்டுள்ளது. இவ்வழியே யாழ்ப்பாணக் குடாநாட்டின் கிழக்குக் கரையோரத்தில் அமைந்து காணப்படும் வல்லிபுரம் என்னும் புராதன தலம் பற்றிய இச்சிறு கள ஆய்வும், யாழ்ப்பாண வரலாற்றிற்கு ஒரு புதிய தொடர்ச்சியைத் தருவதாக அமையலாம் அப்புதியதொடர்ச்சியின் போக்கினையும், வளர்ச்சிநிலையினையும் வல்லிபுரம் விஷ்ணு ஆலயத்தின் தோற்றம், தன்மை, அதன் வளர்ச்சிப் போக்கு என்ற மூன்று நிலைகளிலிருந்தும் நோக்கிக் கொள்ளலாம்.

விஷ்ணு வழிபாட்டு மரபின் தொன்மை

வல்லிபுரத்தில் அமைந்துள்ள விஷ்ணு கோவிலின் தோற்றத்தினைப் பற்றி ஆராயப்புகுமுன் தென் ஆசியாவில் விஷ்ணு வழிபாட்டின் தொன்மையைப் பற்றிச்சற்று நோக்குவது பொருத்தமானதாகும். இந்து சமயத்தின் முப்பெரும் பிரிவுகளில் காலத்தால் முற்பட்டது சைவமே என்பதனை மறுப்பதற்கில்லை. அடுத்த நிலையில் வைணவமே முக்கிய பங்கு வகித்து வந்தமையைக் காணலாம். இருந்தும் தென்னாசியாவில் காலத்தால் முற்பட்ட இந்துகோவில் அமைப்பின் மரபினைப்பார்க்கும் போது விஷ்ணுவுக்குரிய கோயில் ஒன்றின் அழிபாடுகளையே வட மேற்கிந்தியாவில் உள்ள பெஸ்நகர் என்ற இடத்தில் காணமுடிகிறது. தொல்லியல் ரீதியாகப் பார்க்கும் போது தென்னாசியாவில் முதன் முதலாக அமையப்பெற்ற இவ்விஷ்ணு கோவிலின் அமைப்பே காலத்தால் முற்பட்டது என்பதனை உறுதிப்படுத்தக்கூடியதாக உள்ளது. கோவில் அழிந்துவிட்ட போதிலும், அக்கோவிலின் மையப்பகுதியில் நாட்டி வைக்கப்பட்ட கருடத்தூண் ஒன்றும், அத்தூணில் பொறிக்கப்பட்ட பிராகிருத சாசனமுமே இன்றும் அங்கு வாசுதேவனுக்காக ஒரு கோயில் எடுப்பிக்கப் பட்டிருந்தமைக்குச் சான்றாக அமைகின்றன. அச்சாசனத்தின் பிரகாரம் கிபி.1 ஆம் நூற்றாண்டுக்கும் சற்று முற்பட்ட காலப்பகுதியில் வாசுதேவனுக்கான அக்கோயில் அங்கு அமைக்கப்பட்டது என்பதனை உறுதிப்படுத்தலாம்.

ஒருவேளை சிலர் காலத்தால் முற்பட்ட சதபதப்பிராமணத்தினை கோயிற்கட்டிடக்கலைமுறை தொடர்பாக எடுத்துக்காட்டி, விஷ்ணு கோவிலுக் குரியதாகப் பரிந்துரை செய்யப்பட்ட விதிகளின் அடிப்படையில் விஷ்ணு வழிபாடானது தென்னாசியாவில் காலத்தால் முற்பட்டது என வாதிடலாம். அதன் பிரகாரம் விஷ்ணு வழிபாட்டின் தொன்மையை கி.மு. 5 ஆம் நூற்றாண்டுக்குரியதாகவோ அல்லது அதற்கும் முற்பட்ட வேதகாலப் பகுதிக்குரியதாகவோ கொள்ளலாம். ஆனால் இதுவரையில் அவ்வழிபாட்டு மரபு தொடர்பாகக் கிடைக்கப்பெற்ற தொல்லியற் சான்றுகளின் அடிப் படையில் நோக்கும் போது தென்னாசியாவில் கி.பி.1 ஆம் நூற்றாண்டுக்கும் சற்று முற்பட்ட ஒரு காலப்பகுதியிலிருந்தே மக்கள் மத்தியில் விஷ்ணு வழிப்பாடு ஒரு முக்கிய இடத்தினைப் பெற்று வந்திருக்கின்றது எனக் கூறலாம்.

இவ்வாறு கி.பி.1 ஆம் நூற்றாண்டினைத் தொடர்ந்து விஷ்ணு வழிபாட்டு மரபு, குப்தர்களுடைய காலத்தில் மேலோங்கிய நிலையைப் பெற்றுக் கொண்டது. கி.பி. 3ஆம் நூற்றாண்டுக்கும் கி.பி. 6ஆம் நூற்றாண்டுக்கு மிடையே உள்ளநான்கு நூற்றாண்டுக்கால பண்பாட்டு மறுமலர்ச்சியில் வைணவ மரபு மிகவும் உச்சமான நிலையை பெற்றுக் கொண்டது. வைணவக் கோயிற் கட்டிடக்கலை மரபுகளும் வைணவ விக்கிரகவியலும் அதியுயர்ந்த வளர்ச்சி நிலைகளைப் பெற்றிருந்தன. இக்காலத்திலேயே தென்னிந்தியா, இலங்கை, தென்கிழக்காசிய நாடுகளில் விஷ்ணு வழிபாட்டு மரபு பரந்து வேரூன்றி, மக்கள் மத்தியில் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியது. குப்தர் காலத்தில் வைணவ விக்கிரகவியலில் ஏற்பட்டிருந்த அதியுன்னத வளர்ச்சிநிலை பக்கம்பக்கமாக பௌத்தக்கலைமரபிலும் குறிப்பாக மகாயானப் பௌத்தக் கலை மரபில் பெரும்தாக்கத்தை ஏற்படுத்தி நின்றது. இதனால் விஷ்ணுவின் விக்கிரகவியலைப் போன்று நிற்கின்ற இருக்கின்ற சயனநிலைகளில் புத்தர் சிற்பங்களும் உருவாக்கப்பட்டன. புத்தர் விஷ்ணுவின் ஓர் அவதாரம் என்ற கருத்தும் இக்காலத்தில் நன்கு மேலோங்கியிருந்தது. இவ்வளர்ச்சி நிலை காரணமாக மகாயான பௌத்தசமயம் பரவிய இடங்களிலெல்லாம் விஷ்ணுவுக்கெனவும் தனித்துவமான பிரகாரம் அமைக்கப்பட்டு, வழிபாடுகள்ஆராதனைகள் நடத்தப்பட்டன. மகாயானப் பௌத்த மையங்களில் புத்தருடைய உருவ அமைப்பு முழுவதுமே வைணவ விக்கிரகவியலுக்குரிய இலட்சணங்களை வெளிப்படுத்துவதாக அமைந்தன. இதனாலேயே இலங்கையிலும் இன்றுவரை பௌத்த-வைணவ வழிபாட்டு மரபுகள் ஒன்றுக்குள் ஒன்று மயங்கி வருவதனைக் காணலாம்.

ஆனால் தமிழ் நாட்டினைப் பொறுத்தமட்டில் இம்மயக்க நிலையைக் காண்பது பெரிதும்அரிதாகும். காரணம் பல்லவர் காலத்தில் ஏற்பட்டிருந்த

பக்திப்பிரவாகமானது வைதீக சமயப் பிரிவுகளில் ஒன்றான வைணவத்தினை அவைதீகமார்க்கமான பௌத்தத்திலிருந்து வேறுபடுத்திவிட்டது. இருந்தும் ஆழ்வார்களுடைய பாசுரங்களிலிருந்து விஷ்ணுவுக்கும் புத்தருடைய அற்புதச் செயல்களுக்குக்குமிடையிலான தொடர்புகளையும் ஒற்றுமைகளையும் காணமுடிகிறது. பௌத்த ஜாதகக் கதைகளில் புத்தர் அன்னப்புள் வடிவம் கொண்டு பறந்ததாகக் குறிப்பிடும் அதே செய்தியினைத் திருமங்கையாழ்வார் விஷ்ணு அன்னப்பறவை வடிவம் கொண்டு மேலே பறந்து சென்றதாகக் குறிப்பிட்டுள்ளார். மேலும் சோழர்காலத் தமிழகத்தில் நாகபட்டினத்தில் பல பௌத்த விகாரங்கள் அமைக்கப்பட்டிருந்தன. சூடாமணி பன்மவிகாரம் அவற்றுள் சிறப்பானதாகும். இங்கிருந்து புத்தருடையதும் விஷ்ணுவுடையதுமான பல வெண்கல விக்கிரகங்கள் அண்மைக் காலங்களில் மீட்டெடுக்கப்பட்டுள்ளன. இலங்கையிற் கூட சோழர்களுடைய ஆட்சிக் காலத்தில் திரியாய் என்னுமிடத்தில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்ப்பௌத்தப் பள்ளியிலிருந்து புத்தருடையதும் விஷ்ணுவுடையதுமான வெண்கலச்சிலைகள் மீட்டெடுக்கப்பட்டுள்ளன. இலங்கையைப் பொறுத்தமட்டில் விஷ்ணு வழிபாடும் (மகாயான) பௌத்தமரபும் இணைந்து செயற்பட்ட, செயற்படுகின்றவிதம் தனித்துவம் வாய்ந்தது என்றே கூறவேண்டும். இப்பின்னணியிலேயே இலங்கையில் விஷ்ணு வழிபாடு தொடர்பாக நோக்கவும் வேண்டியுள்ளது.

இலங்கையில் விஷ்ணு வழிபாட்டு மரபு

இலங்கைத்தீவின் காவற்தெய்வமான விஷ்ணு வணங்கப்பட்டு வந்த மரபின் பின்னணியில் தெற்கில் தெவுந்தரவிலும், வடக்கில் வல்லிபுரத்திலும், கிழக்கில் கதிரவெளியிலும், மேற்கில் உடப்பிலும் புராதன விஷ்ணு கோயில்கள் அமைக்கப் பெற்றிருந்தன. இரண்டு பிரதான நிலைகளில் விஷ்ணு வழிபாடு இங்கு மக்கள் மத்தியில் முக்கிய பங்கெடுத்திருந்தது. ஒன்று, முற்றிலும் இந்துப் பண்பாட்டுச் சூழலில் விஷ்ணு வழிபாடு குறிப்பிட்ட மையங்களில் மேலோங்கியிருந்துள்ளமையைக் கண்டு கொள்ள முடிகிறது. அனுராதபுரம், பொலநறுவை, கண்டி, புத்தளம் ஆகிய மையங்களில் இந்துப் பாரம்பரியத்தின் பின்னணியில் விஷ்ணு வழிபாட்டு மரபுகள் பின்பற்றப்பட்டிருந்தன. பொலநறுவையில் அகழ்ந்து வெளிப்படுத்திய இந்துக்கோயில்களில் ஐந்து விஷ்ணு கோயில்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அவை சோழர் இலங்கையை ஆட்சி செய்த காலப்பகுதியில் அமைக்கப் பட்டிருந்தன என்பது தொல்லியலாளரின் முடிவாகும். இதேபோன்று கந்தளாயிலும் இந்து மரபின் பின்னணியில் விஷ்ணு கோயில் ஒன்று அமைந்திருந்ததற்கான தொல்லியற் சான்றுகள் கிடைத்துள்ளன. மிகவும் அண்மைக்காலத்தில் கிளிநொச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட "சந்தனவேணு கோபாலன்" வடிவிலான விஷ்ணுவின் கருங்கற்சிலையானது அங்கும் இந்து

மரபின் பின்னணியில் விஷ்ணு கோயில் ஒன்று இருந்ததற்கான சான்றாக அமைந்துள்ளது.

இரண்டாவது நிலையில், பௌத்தப் பாரம்பரியப் பின்னணியில் பேணப்பட்டு வந்த விஷ்ணு வழிபாட்டு மரபின் தன்மையை இங்கு விரிவாக நோக்குதல் வேண்டும். யாழ்ப்பாணக் குடாநாட்டினைப் பொறுத் தவரையில் விஷ்ணு வழிபாட்டு மரபின் தொன்மை, தமிழ்ப்பௌத்தப் பாரம்பரியத்தின் வளர்ச்சியின் தொடர்ச்சியாகக் காணப்படுவதனால் விரிவானமுறையில் அத்னை இங்குத் தெளிவுபடுத்தல் வேண்டும்.

இந்நிலையிற் பொன்னாலையில் உள்ள வரதராஜப் பெருமாள் கோயில், பருத்தித்துறையிலுள்ள வல்லிபுர ஆழ்வார் கோயில், பூத்தூரில் இருந்து மறைந்த விஷ்ணு கோயில், கந்தரோடையில் இருந்து மறைந்த விஷ்ணு கோயில் ஆகிய மையங்களின் வளர்ச்சி, அவை பகைப்புலமாகக் கொண்டுள்ள பகுதியின் பழமையான பண்பாட்டு வெளிப்பாடு ஆகியனவற்றை நோக்கும்போது தமிழ்ப்பௌத்தத்தின் செல்வாக்கினை நன்கு கண்டுகொள்ளமுடிகிறது.

உண்மையில் தென்னிந்தியாவில் கிருஷ்ணா நதியின் முகத்துவாரப் பகுதியை உள்ளடக்கிய ஆந்திர கலைமரபுக்குரியதான பௌத்தத்தின் இயல்புகளையே இங்குத் தமிழ்பௌத்தமரபு தொடர்பாகக் காணமுடிகிறது. இதனைத் திட்டவட்டமான தொல்லியல், இலக்கியச் சான்றுகள் வாயிலாக வல்லிபுரம் விஷ்ணு ஆலயத்துடன் தொடர்புபடுத்திய வகையில் கண்டு கொள்ளலாம். இவ்வாறு வல்லிபுரத்தில் விஷ்ணு வழிபாட்டு மரபு ஒன்று தனித்துவம் பெறத் தொடங்கியதற்கு முற்பட்ட நிலையில் அப்பிராந்தியம் பெற்றிருந்த சமூக, சமயத் தொடர்புகளின் முக்கியத்துவத்தினை தமிழ்நாட்டுடன தொடர்புபடுத்திய வகையில் 'மணிமேகலை' என்னும் தமிழ்ப்பௌத்தக் காவியத்திலிருந்து ஆதாரங்களைக் காட்டிச் செல்லலாம்.

வல்லிபுரமும் மணிபல்லவமும்

காவிரிப்பூம்பட்டினத்திலிருந்து நேர்தெற்கே 36 காதம் தொலைவில் நெடுமணல் குன்றங்களுள் அமைந்திருக்கின்ற மையமே வல்லிபுரமாகும். இவ் வல்லிபுரத்துடன் இணைந்த பரந்த நிலப்பரப்பினை வல்லிபுரக் குறிச்சி என்ற கிராமமும் பல்லப்பை என்ற கிராமும் உள்ளடக்கியுள்ளன. பல்லப்பை என்ற கிராமத்தினுள் முதனிலையாய்வில் ஈடுபட்டபொழுது அது ஒரு புராதான பழம்பெருங்கிராமம் என்பது வெளிப்படையாயிற்று. பல்லப்பை என்ற கிராமத்தின் ஒரு சிறு பிரிவே புலோலி என இப்பொழுது வழங்கப்படும் கிராமமாகும். இம்மூன்று கிராமங்களையும் உள்ளடக்கிய பெருமணற்பரப்பினையே மணிமேகலையில் வரும்

மணிபல்லவம் என்ற இடப்பெயர் குறித்து நின்றது என்பது அண்மைக்காலங்களாக் மேற்கொள்ளப்பட்டு வந்த மேலாய்வின் மூலமாகக் காணமுடிந்தது. பல்லப்பை என்ற கிராமத்தின் பெயரானது மணிபல்லவம் என்பதில் உள்ள 'மணி' விடுபட்டதன் பின்னர் மருவி வழங்கப்பட்ட இடப்பெயராகக் கொள்ளலாம். இவ்வாறு கொள்வதற்கு அடிப்படையாகக் கிடைத்துள்ள வேறு புறச்சான்றுகளையும், மணிமேகலையில் இடம் பெறும் சில அகச்சான்றுகளையும் இங்கு எடுத்துக் காட்டுவது பொருத்தமாகும்..

'மணிபல்லவம்' என்பதில் உள்ள 'பல்லவம்' தற்காலத்தில் வழங்கப்படுகின்ற 'பல்லப்பை' என்ற கிராமத்தினைக் குறித்து நிற்கின்றது எனக் கொள்வதற்குக் கிடைத்த இரண்டு முக்கியமான புறச்சான்றுகளை இங்கு எடுத்துக்காட்டுவது எதிர்கால ஆய்வுக்குப் பயன் தரும்.

1. வல்லிபுரத்திலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பொற்சாசனத்தில் இடம்பெறும் 'மணிபடகரஅதன' என்பது.

2. புலோலி என்னுமிடத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அமராவதி அல்லது ஆந்திரக்கலை மரபில் உருவான புத்தரின் கருங்கற்சிற்பம் ஒன்று.

வல்லிபுரக் கோயிலிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட பொற்சாசனம் தொடர்பான கருத்துமோதல்கள் ஒருபுறமிருக்க, அதில் இடம்பெறும் 'மணிபடகர அதன' என்ற இடப்பெயரினை, பல்லப்பை என்ற பெயருடன் தொடர்புபடுத்திக்காட்ட முயற்சிக்கலாம்.

பேராசிரியர் வேலுப்பிள்ளை அவர்கள் 'படகர அதன' என்பதனை வடகரை அதனில்' என வாசிக்க முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார். இருப்பினும் பொற்சாசனத்தில் இடம்பெற்றுள்ள 'படகர அதன' என்ற பெயரினைத் தற்காலப் பல்லப்பை என்ற இடப்பெயருடன் அடையாளம் காண்பது சரி என ஏற்றுக் கொள்ளப்படுமாயின் மணிமேகலைக்கும் வல்லிபுரத்திற்குமிடையிலான தொடர்பினைத் தமிழ்ப் பௌத்த மரபின் அடிப்படையில் உறுதிப்படுத்திக் கொள்ளலாம். இதன் அடிப்படையில் வல்லிபுரம் என்ற மையத்தின் வரலாறானது மிக நீண்டதாகவும் காலத்தால் மிகமிகப் பழமை வாய்ந்ததாகவும் அமையும். அவ்வாறான ஒரு பழமையான மையததில்ல் - நகரத்தில் - திராவிடப்பண்பாட்டின் அம்சங்கள் இடையீடு இன்றித் தொடர்ச்சியான முறையில் வளர்ச்சி பெற்று வந்திருந்தன என்பதும், அவ்வாறான பண்பாட்டுப் பாரம்பரியமொன்றின் வளர்ச்சி நிலை, முதலில் பெருங்கற்காலத் திராவிட மக்களுக்குரியதாகவிருந்து பின்னர் அச்சமூகத்தின் வளர்ச்சி நிலையில் அவர்கள் பௌத்தத்தைத் தழுவியவர்களாகவும் அதன் பின்னர் பௌத்தம் குன்றத் தொடங்கிய நிலையில் அதனுடன் இணைந்து

காணப்பட்டிருந்த வைணவ மரபினை மத்திய காலத்திலிருந்து தழுவிக் கொண்டனர் என்பதனையும் காணலாம். கி.பி.15ஆம் நூற்றாண்டில் எழுதப்பட்ட 'கோகில சந்தேசய' என்ற சிங்கள குயில்விடு தூதுப் பிரபந்தத்தில் வட இலங்கையிலிருந்த இரண்டு பிரதான விஷ்ணு கோயில்கள் பற்றிய குறிப்பு இடம் பெற்றுள்ளது. இவற்றுள் ஒன்று பொன்னாலையிலுள்ள வரதராஜப் பெருமாள் கோயில் ,என்பது வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளது. மற்றையது வல்லிபுரத்தில் அமைந்துள்ள விஷ்ணு கோவிலாகவே இருக்கவேண்டும் என்பது வரலாற்றாசிரியர்களது கருத்தாகும். கி.பி 15ஆம் நூற்றாண்டினைத் தொடர்ந்து இலங்கையின் கரையோர மாகாணங்கள் போர்த்துக்கீசல் ஒல்லாந்தர் ஆகியோரின் மேலாதிகத்துக்குள் வந்தமை காரணமாக பல இந்துக் கோயில் களும், அம்மரபினைப் பேணிவந்த நிறுவனங்களும் அழிக்கப்பட்டன. அந்நிலையில் வல்லிபுரத்தில் அமைந்த விஷ்ணு கோயிலும் போத்துக்கீசர், ஒல்லாந்தர் ஆகியோரது கலையழிவுக் கொள்கைக்குட்பட்டிருக்கலாம். வல்லிபுரக் கோவிலையடுத்து அமைந்துள்ள மணற்பரப்பிலிருந்து காலத்துக்குக் காலம் பெற்றுக் கொள்ளப்படுகின்ற ஏராளமான போர்த்துக்கீச - ஒல்லாந்தர் (V.O.C.) நாணயங்களை ஆதாரம் காட்டி அக்கூற்றினை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

மணிபல்லவமும் பெருங்கற்கால மக்களும்

வல்லிபுரத்தின் வரலாற்றுத் தொடர்ச்சியை, பல்லப்பை அதன் புரதன வடிவமான 'மணிபல்லவம்' என்பதனூடாக நோக்குவதற்கு உதவுமாயின், அதன் வரலாற்றுத் தொடக்கத்தையுமே மறுவளமாக எடுத்துக்காட்ட உதவும் எனலாம். இவ்வகையில் மணிமேகலை என்ற நூலில் மணிபல்லவம் தொடர்பாகச் சித்திரிக்கப்படுகின்ற சில அகச்சான்றுகள் வல்லிபுரத்தில் காணப்படுகின்ற புறச்சான்றுகளுடன் ஒப்புநோக்கத்தக்கவை. அவை பின்வருமாறு:

அ) 'ஊர்திரை தொகுத்த உயர்மணல் புதைப்ப
ஆய்மலர்ப் புன்னை அணிநிழற் கிழார்' (காதை 35 வரி 158-174)

ஆ) 'மணிபல் லவத்திடை தன்உடம்பு இட்டு' (காதை 14 வரி 99-104)

இ) 'மணிபல் லவத்திடை மன்னுயிர் நீத்தோன்'... (காதை 15 வரி 16)

ஈ) 'துறையும், துறைசூழ் நெடுமணல் குன்றமும்' ... (காதை 8 வரி 35)

உ) 'விரைமரம் உருட்டும் திரைஉலாப் பரப்பின்
முடக்கால் புன்னையும் மடல்பூந் தாழையும் "(காதை 8 வரி 1-9)

ஊ) "அறல்விளங்கு நிலாமணல் நறுமலர் பள்ளி" ... (காதை 8 வரி 1-8)

எ) "நாகர் துயர்கெட நடப்போய் நின்அடி" ... (காதை 11 வரி 68)

ஏ) "பொன்அணி நேமி வலம்கொள் சக்கரக்கை
மன் உயிர் முதல்வன்" (காதை 13 வரி 57-58)

ஐ) "நீல மாக்கடல் நெட்டிடை அன்றியும்
காலை ஞாயிறு கதிர்விரித்து முளைப்ப" (காதை 8 வரி 1-8)

மணிமேகலையில் மணிபல்லவம் தொடர்பாக ஆபுத்திரன் கதையில் விவரிக்கப்பட்ட சில தொடர்கள் மணிபல்லவத்தில் நாகர், ஆயர், வேள், இடையர் ஆகிய திராவிட இனத்தினர் மத்தியில் நிலவியிருக்கக்கூடிய பெருங்கற்கால சவ அடக்குமுறைகளை நினைவூட்டுவனவாக அமைந்துள்ளன. அத் தொடர்களுள் முக்கியமான "உயர் மணல் புதைப்ப", "தன் உடம்பு இட்டு", "மணிபல்லவத்திடை மன்னுயிர் நீத்தோன்" என்பன வல்லிபுரப் பிராந்தியத்தில் காணப்படுகின்ற திராவிட சவ அடக்குமுறையான பெருங்கற்கால ஈமக்கிரியை முறையை ஒத்திருக்கின்றன. இத்தகைய தன்மையைக் கொண்ட பரப்பானது பெருமணற் குவியல்கள்-குன்றங்களைக் கொண்டதாகவும், கடற்கரையோரமானதாகவும் அதி வேகமான திரை வீச்சினால் விரைமரங்களை உருட்டுகின்ற தன்மையைக் கொண்டதாகவும், மடல் பூந்தாழைகளைக் கொண்ட "தாழையடி" யாகவும் காணப்பட்டது என மணிமேகலை சித்திரிக்கின்றது. இப்பின்னணியானது பெருமளவுக்கு வல்லிபுரப்பிராந்தியத்தினையே குறித்துள்ளது என அங்குக் கிடைக்கும் புறச்சான்றுகள் வாயிலாகக் குறிப்பிட்டுக் கொள்ளலாம். தற்பொழுது வல்லிபுரம் விஷ்ணு ஆலயம் அமைந்திருக்கின்ற மையத்திற்குத் தென்கிழக்குத் திசையில் 2 மைல் தொலைவில் பெருங்கற்கால இடுகாடு ஒன்று காணப்படுகின்றது என்பதும் அதற்கண்மித்த மையங்களில் இன்று வரைக்கும் சமாதிகோயில்களை அமைக்கின்ற பண்பு தொடர்ந்து வந்திருக்கின்றது என்பதும் இங்குக் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணக் குடாநாட்டினைப் பொறுத்தவரையில் காலத்தால் முற்பட்ட மனித நடமாட்டம் காணப்பட்ட பகுதிகளுள் வல்லிபுரமும் ஒன்றாகும். தற்பொழுது வல்லிபுர விஷ்ணு ஆழ்வார் கோவில் அமைந்திருக்கின்ற மையத்திலிருந்து தென்கிழக்குத்திசையில் உள்ள பகுதி தொல்லியல் அகழ்வாய்வுக்குரிய இடமாகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. தென்கிழக்கே நாகர்கோவிலுக்கும், வல்லிபுரத்திற்குமிடைப்பட்ட இப்பகுதி யிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தொல்லியற்சான்றுகள் அக்கருத்தினை உறுதி செய்கின்றன. இங்கிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கி.மு. 6ம்

நூற்றாண்டுக்குரிய வெள்ளி உலோகத்தாலான அச்சுக்குத்தப்பட்ட நாணயமொன்று (Punch-Marked-coin) அண்மையில் கிடைத்திருப்பது என்பது அப்பகுதியின் மனித நடமாட்டத்தின் பரிணாமத்தினை உறுதிப்படுத்த உதவுவதாக அமைகின்றது. மேலும் கிறிஸ்தாபதத்திற்கு முற்பட்ட லக்சுமித் தகடுகள் (Luxmi Plaque) பல்லவ, சோழ நாணயங்கள், சேது நாணயங்கள், அராபிய போத்துக்கீசிய-டச்சு நாணயங்கள் என்பனவும் பல்வேறு அளவுகளில் கிடைத்தவண்ணமுள்ளன. இவை வல்லிபுரம் பிராந்தியமானது தென்னிந்தியாவுடனும் மேற்குலகுடனும் தரை-கடல் வழிவந்த மார்க்கங்களில் வர்த்தக முயற்சிகளில் ஈடுபட்டிருந்தது என்பதனை உறுதிப்படுத்த உதவுகின்றன. தென்னிந்தியாவுடன் வர்த்தக முயற்சிகளில் ஈடுபட்டதன் அடிப்படையில் ஆந்திர தமிழகப் பண்பாட்டுச் செல்வாக்கு இங்கு ஏற்பட்டது என்பதனை உறுதிப்படுத்தும் சான்றுகளும் எமக்குக் கிடைத்துள்ளன. முதலில் ஆந்திர கலைமரபின் செல்வாக்கினுள் உட்பட்ட நிலையில் தமிழ்ப்பௌத்தப் பாரம்பரியமொன்றினை உருவாக்கியிருந்த இம்மையத்தின் அப்புராதன வடிவத்தினை மணிமேகலையில் வரும் மணிபல்லவக்காட்சிகளில் இருந்து கண்டு கொள்ளலாம். அவ்வாறான ஒரு நிலை, பின்னர் தமிழ் நாட்டில் ஏற்பட்டிருந்த பக்தி இயக்கத்தின் பின்னணியில் (கி.பி.7ம் நூற்றாண்டினைத் தொடர்ந்து) பௌத்தம் செல்வாக்குக் குன்ற அதனுடன் இணைந்திருந்த விஷ்ணு வழிபாட்டு மரபானது மேலோங்கிய ஒரு நிலையை அப்பகுதி மக்களிடத்தில் பெற்றுக் கொண்டது எனலாம். மணிமேகலையிற் கூட மணிபல்லவத்தில் விஷ்ணு வழிபாட்டு மரபு இருந்ததற்கான அகச்சான்றும் கிடைத்துள்ளது.

"பொன்அணி நேமி வலம்கொள் சக்கரக்கை
மன்உயிர் முதல்வன்" (காதை 13 வரி 57-58)

என்று ஆபுத்திரன் கதையில் மணிபல்லவம் தொடர்பாகக் கூறப்படும் பொழுது விஷ்ணுவைப் பற்றிய குறிப்பும் இடம்பெற்றுள்ளது. இங்கு அவதானிக்கவேண்டிய முக்கியமான அம்சம் "வலம்கொள் சக்கரக்கை" என்பதாகும். இன்றுவரைக்கும் வல்லிபுரத்தில் வலம்கொள் சக்கரத்தினையே வைத்து வழிபாடு நடத்தப்பட்டு வருவதனையும், அச்சக்கரமானது அங்குள்ள நீலப்பெருசமுத்திரத்தின் மீது மிதந்து வந்ததுஎன்ற ஐதீகம் நிலவுவதனையும் காணலாம். எனவே வரலாற்று மரபினை நோக்கும் போது "சக்கரம்" விஷ்ணு வழிபாட்டிற்கும், பௌத்த வழிபாட்டு மரபிற்கும் பொதுமையான ஓர் அம்சமாக இருந்து வருவதனையும், ஒருவேளை இச்சக்கர மரபு தென்னிந்தியாவில் கிருஷ்ணா நதியின் முகத்துவாரப் பகுதியை உள்ளடக்கியுள்ள ஆந்திரக் கலைமரபிலிருந்து கொண்டு வரப்பட்டதாகவும் இருக்கலாம். ஆந்திர மாவட்டத்தில் பௌத்த, விஷ்ணு வழிபாட்டு

மரபானது இரண்டும் ஒன்றுடன் ஒன்று கலந்த நிலையில் வளர்ச்சியடைந்துஇருந்தமையினையும் பின்பு இன்றைய நிலையில் அங்கு விஷ்ணு வழிபாட்டு மரபே மிகவும் மேலோங்கிய நிலையில் செல்வாக்குப் பெற்றிருப்பதனையும் காணலாம். அத்தகைய ஒரு பாரம்பரியத்தினையே வல்லிபுரமும் அன்றும் இன்றும் கொண்டிருந்துவருகின்றது. இதனாலேயே இலங்கையில் எந்தவொரு மையத்திற்கும் கொடுக்கப்பட்டிருக்காத முக்கியத்துவம் வல்லிபுரத்திற்குக் கொடுக்கப்பட்டிருந்தது என்பதனை அங்கிருந்து கிடைக்கப்பெற்ற ஒரேயொரு பொற்சாசனப் பதிவிலிருந்து உணர்ந்து கொள்ளலாம்.

லவல்லியும் மணிமேகலையும்

தட்சிணைகைலாசபுராணத்தில் வரும் லவல்லி, மணிமேகலை என்ற பௌத்தக் காவியத்தில் வரும் மணிமேகலை ஆகியோர் இருவரும் துறவு வயப்பட்ட கன்னிப்பெண்களாகச் சித்திரிக்கப்பட்டுள்ளனர். மணிமேகலை என்ற நூல் தோற்றம் பெற்றுப் பலநூறு வருடங்களின் பின்னரே தட்சிணைகைலாசபுராணம் தோற்றம் பெற்றது எனலாம். இந்நிலையில் மணிமேகலையுடன் 'மணிபல்லவம்' என்ற மையமும் லவல்லியுடன் வல்லிபுரமும்இணைத்துக் காட்டப்படுவதும் இவற்றினிடையே காணப்படும் ஒற்றுமைத்தன்மையும் ஆராயப்படத்தக்கன. இவ்விரு ஐதீகங்களிலும் அவரவர் முற்பிறப்பு நிலைகள் எடுத்துக்காட்டப்பட்டிருப்பதும் அவதானிக்கத்தக்கது. எனவே ஒரே மையத்தில் நிகழ்ந்த இரு சம்பவங்களாக ஐதீகமட்டத்தில் இதனை எடுத்துக்கொள்ளலாம். அவ்வாறாயின் மணிபல்லவமும் வல்லிபுரமும் ஒரே மையத்திற்கிடப்பட்ட இரு வேறு பெயர்கள் எனக் கொள்ளலாம். இதில் முதலாவது காலத்தால் முற்பட்டது. மற்றையது பிற்பட்டதாகும்.

முடிவுரை

வல்லிபுரம் என்ற புராதன நகரம் மணிமேகலை குறித்து நிற்கும் மணிபல்லவமே என்ற கருத்தினை இன்றைக்குப் பல தசாப்தங்களுக்கு முன்னர் 'வரகவிஞகவும் நுண்மாண் நுழைபுலம் மிக்கானாகவும்' விளங்கிய கந்தமுருகேசனார் முன்வைத்திருந்தார். அவருக்குப் பின்னர் அக்கருத்தினை ஓரளவுக்காவது கிடைத்துள்ள இலக்கியதொல்லியற்சான்றுகள் வாயிலாக வலுவூட்டுவதற்கு முயற்சி இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது. அம்முயற்சியின் பிரதான நோக்கம் வல்லிபுரத்தில் அன்று தொட்டு இன்றுவரைக்கும் தமிழ்ப் பாரம்பரியமொன்று வளர்ச்சியடைந்து கொண்டு வந்திருக்கின்றது என்பதனை வெளிப்படுத்துவதாகும். தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை தமது நூலொன்றில் வல்லிபுர விஷ்ணு வழிபாட்டின் பரிணாமத்திற்கு அடிப்படையாக விளங்கியிருந்திருக்கக் கூடிய 'சக்கரன்'

வழிபாட்டினைப்பற்றி (சக்கரன்-இந்திரன்; மக்கள் வணங்கிவரும் இந்துக் கடவுளர்) விளக்கியுள்ளார். சக்கரன் வழிபாடு பின்பு 'சக்கர' வழிபாடாக மாற்றமடைந்து சக்கரத்தினை ஆயுதமாகக் கொண்ட விஷ்ணு வழிபாடாக பரிணமித்தது என்று அவர் குறிப்பிடுகின்றார். அவர் கொடுத்த இவ்விளக்கத்தினை ஒருபுறத்தே கொண்டு மணிமேகலையில் வரும் மணிபல்லவத்தில் இந்திரனுடைய நடவடிக்கைகளை நோக்குவோமாயின் மேலும் பல விளக்கங்களை வல்லிபுரம் பற்றிப் பெற்றுக் கொள்ளலாம். மணிமேகலையில் கூறியுள்ளதன்படி இந்திரன் மணிபல்லவத்திற்கு வந்து தனக்கு ஏற்பட்ட 'பிரம்மஹத்திதோஷத்தினை' நீக்குவதற்காக, பரமேசுவரி பீடம் ஒன்றினை உருவாக்கி வழிபட்டான் என்பதனை அறியலாம். தட்சிணகைலாசபுராணத்தில் வல்லிபுர மான்மியத்தில் வரும் குறிப்பின்படி லவல்லி என்ற கன்னிகை தனது நாகசாபத்தினை நீக்குவதற்காக வல்லிபுரத்திற்கு வந்தாள் எனக் கூறப்படுவதனைக் காணலாம். பௌத்தமரபின்படி புத்தருடைய இரண்டாவது வருகை மணிபல்லவத்தில் இரண்டு நாக அரசர்கள் பீடம் ஒன்றிக்காக (சிம்மாசனம்) போராட்டம் மேற்கொண்ட பொழுது அதனைத் தீர்த்து வைப்பதற்காக அமைந்திருந்தது என்பதனையும் காணலாம். இவ்வாறு பல்வேறு மரபுகள் குறிப்பிடும் இச்சம்பவங்கள் பற்றி தொடுத்து நோக்கும் பொழுதும், இப்பிராந்தியத்தில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தொல்லியல் ஆதாரங்களைக் கொண்டு நோக்கும் பொழுதும் ஒரு பொதுமையானமுடிவுக்கு வரமுடிகிறது. அதாவது வல்லிபுரமும் அதன் பின்னணி நிலமும் (Hinter Land) தமிழ்ப் பாரம் பரியத்தின் தொடர்ச்சியான வளர்ச்சிமையமாக இருந்து வந்துள்ளது என்பதும் ஆனால் தமிழரல்லாத ஏனைய மொழிபேசும் (சிங்களவர் உட்பட) இனத்தினரும் வந்து சென்றிருக்ககூடிய ஒரு யாத்திரை மையமாக விளங்கி வந்தது என்பதனையும் காணமுடிகிறது. அந்நிலையில் அம்மையத்தில் அவ்வவ்வினத்தினருடைய காணிக்கைப் பொருட்கள் சேர்வதனையும் அவை காலாகாலமாக ஆலயத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டுக் கொண்டு வரப்படுவதையும் காண்பது இயல்பு. அக்காணிக்கைப் பொருட்கள் பௌத்த மரபினைச் சேர்ந்தவையாகவும் வைணவ (இந்து) மரபினைச் சேர்ந்த வையாகவும் இருப்பது இத்தகைய மையங்களில் ஒரு பொது வியல்பாகும். இதற்கு வல்லிபுர விஷ்ணு ஆழ்வார் கோவிலும் விதிவிலக்கல்ல.

துணை நூல்கள்

1. ஆபுத்திரனும் அமுதசுரபியும், கதிரித்தம்பி,சி.ஆ, 1980
2. 'மணிமேகலையின் பௌத்தம்', வானமாமலை, நா, ஆராய்ச்சி, இதழ் 2, பக்கம் 159-188, 1969.
3. யாழ்ப்பாணக் குடநாட்டிலுள்ள பிரதான தொல்லியற்றலங்கள், கிருஷ்ணராசா, செ, சிறப்புக்கலைமாணித் தேர்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை (பிரசுரிக்கப்படாதது) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1979.
4. வல்லிபுரம், ஒரு தொல்லியற் களஞ்சியம், சிவசாமி.வி, சங்கமம், மலர் 1, இதழ் 4, பக்கம் 12-16, 1975.
5. ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் திருக்குட முழுக்குமலர், ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில் மகாசபை, 1977.

கலித்துறையின் வகைகள்

த. ராஜேஸ்வரி.

கலித்தாழிசை, கலித்துறை, கலிவிருத்தம் என்பன கலிப்பாவின் இனங்கள் ஆகும். அடிதோறும் ஐந்து சீராய் நான்கடியாய் வருவன கலிநிலைத்துறை. இதைக் கலித்துறை என்றும் கூறுவர்.

கலிநிலைத்துறை

கலிநிலைத்துறை பற்றி யாப்பருங்கலவிருத்தி [1] யாப்பருங்கலக் காரிகை [2] வீரசோழியம் [3] இலக்கண விளக்கம் [4] தொன்னூல் விளக்கம் [5] முத்து வீரியம் [6] அறுவகை இலக்கணம் [7] முதலிய இலக்கண நூல்களும் காக்கை பாடினியார் [8] அவிநயனார் [9] மயேச்சுரர் [10] போன்ற இலக்கண ஆசிரியர்களும் தெளிவாக இலக்கணம் வகுத்துள்ளதைக் காணலாம்.

மேலே கூறியவற்றுள் தண்டபாணி சுவாமிகள் இயற்றிய அறுவகை இலக்கணம் கலித்துறையின் ஈற்றுச்சீர் கனிச்சீராக வரும் என்றுரைக்கின்றது. இதற்குச் சான்றாக,

'அயில்வேல் எடுத்தம்பொன் மயிலேறி யென்நெஞ்ச கத்தெய்தியே
வெயில்மேய புழுவில்து டிக்கச்செய் வினைநோயின் வேர்கெல்லுவாய்
கயிலாய மலைநாதர் புதல்வாநல் வயலூர்க்க ருஞ்சோலைசூழ்
சயிலாதி பா!கீரன் முதலோர்தொ டுக்குந்த மிழ்ச்செல்வனே

(பழனித் திருவாயிரம்-நான்மணிமாலை - 14)

என்னும் பாடலைப் ப.வெ. நாகராஜன் அவர்கள் தம் நூலில் (வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் அறுவகை இலக்கணம் உரையுடன் , பக். 290) காட்டியுள்ளார். இப்பாடலின் ஒவ்வொரடியிலும் ஈற்றுச்சீர் கனிச்சீராக அமைந்திருப்பதைக் காணலாம்.

அடிதோறும் பொருள் முடிந்து அடிமறியாய் [11] ஐஞ்சீர் நாலடியாய் வரும் கலித்துறைப் பாடல்களைக் 'கலிமண்டிலத்துறை'என யாப்பருங்கல விருத்தியும், 'மண்டிலக்கலித்துறை' என வீசோழியமும் கூறுகின்றன.

காப்பியக் கலித்துறை

வீரசோழியும் 121-ஆம் காரிகையின் உரைப்பகுதியின் இறுதியில் 'இனிக் கலித்துறையைக் கோவைக் கலித்துறை என்றும் காப்பியக்கலித்துறை என்றும்

இரண்டாக்குவர் எனக் கொள்க?' என்று கூறிய உரையாசிரியர் 122-ஆம் காரிகையின் உரையில்,

'மூன்றான் பெருமைக்க ணின்றான்முடி வெய்து. காறு
நன்றே நினைந்தான் குணமேமொழிந் தான்த னக்கென்
றொன்றானு முள்ளான் பிறர்க்கேயுறு திக்கு ழுந்தான்
அன்றே யிறைவ வைன்றாள்சர ணாங்க ளன்றே'

(குண்டலகேசி, கடவுள் வாழ்த்து)

என்ற பாடலைக் காப்பியக் கலித்துறைக்கு உதாரணமாகத் தந்துள்ளார். ஆனால் அதன் இலக்கணம் என்ன என்பதை விளக்கவில்லை.

சீவக சிந்தாமணியின் கடவுள் வாழ்த்துப் பாடலுக்கு நச்சினார்க்கினியர் 'மூவா முதலா' [12] என்னும் கவி முதலியன தாழம்பட்ட வோசையான் விருத்தமாயும் சீர்வரையறையானும் மிகத் துள்ளிய வோசையானும் துறையாயும் கிடத்தலின் இதனை விருத்தக் கலித்துறை யெனல் வேண்டும்'' என்று கூறியுள்ளார். இதற்கு உ.வே. சாமிநாதையர் "விருத்தக் கலித்துறையென ஒருவகைச் செய்யுட்களைப் பிற்காலத்தில் வழங்குவதுண்டு. இதனைக் காப்பியக்கலித்துறை என்பாரும் உளர் (வீர.யாப்.உரை 18). இவற்றின் இலக்கணம் முதலியவற்றை யாப்பருங்கல விருத்திப்புரையிற் கண்டு கொள்க' என்று குறிப்புரை வழங்கியுள்ளார். ஆயின் யாப்பருங்கல விருத்தி இதற்கு இலக்கணம் கூறவில்லை.

சீவகசிந்தாமணியின் பதிகப்பாடல்கள் நேரசையில் தொடங்கினால் பதினான்கு எழுத்துக்களையும் நிரையசையில் தொடங்கினால் பதினைந்து எழுத்துக்களையும் கொண்டமைந்துள்ளன. இவற்றுள் சில பாடல்கள் [13] தவிர பிற பாடல்களில் எல்லாம் அடிதோறும் மூன்றாம் சீர் புளிமாங்கனியாக உள்ளன.

கலித்துறையின் வகைகள்

கி.வ. ஜகந்நாதன் தம் நூலில், 'காப்பியக் கலித்துறை என்றது சீவக சிந்தாமணி முதலிய நூல்களில் பயின்று வரும் கலித்துறைச் செய்யுட்களை; காப்பியக் கலித்துறை என்னும் பிரிவு ஒன்று தனியே உண்டாதற்குக் காரணம் ஏதேனும் காப்பியத்துள் முதன் முதலாக ஆளப்பட்டிருத்தல். கூடும். அப்படியாயின் அதற்கு வேறு பெயர் அமைத்தல் இயலாதாகக் காப்பியக் கலித்துறை என்றே வழங்கினர் எனக் கொள்ளுதல் தகும்.' என்று விளக்குகின்றார். (தமிழ் காப்பியங்கள் பக். 165)

இவற்றை நோக்கும்போது, மூன்றாம்சீர் கனிச்சீராக வரும் கலிநிலைத் துறைப் பாடல்கள் சீவகசிந்தாமணி, குண்டலகேசி முதலிய நூல்களிலேயே சிறப்பாக அமைந்துள்ளன என்பது புலப்படுகின்றது. இங்ஙனம் அமைந்த பாடல்களே காப்பியக் கலித்துறை என்று வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

கட்டளைக் கலித்துறைப் பாடல்கள்

கட்டளைக் கலித்துறைப் பாட்டல்கள் அப்பர் தேவாரத்திலும் நம்மாழ்வார் பாடல்களிலும் 'திருவிருத்தம்' என்னும் பெயரில் காணப்படுகின்றன.

யாப்பருங்கல விருத்தியின் 95-ஆம் சூத்திர உரையில் 'குமரசேனாசிரியர் கோவையும், தமிழ் முத்தரையர் கோவையும் யாப்பருங்கலக் காரிகையும் போன்ற சந்தத்தால் வருவனவற்றின் முதற்கண் நிரையசைவரின் ஒரடி பதினேழெழுத்தாம், முதற்கண் நேரசைவரின் ஓரடி பதினாறெழுத்தாம் இவ்வாறன்றி மிக்கும் குறைந்தும் வாரா. அவை எண்ணுகின்றுழி ஆய்தமும் ஒற்றும் ஒழித்து உயிரும், உயிர்மெய்யும், குற்றியலிகரமும், குற்றிலுகரமும் கொண்டு எண்ணப்படும் என்ற விளக்கமும்

'எழுவாய் நிரைவரினாம் ஏழுடைய ஈரைந்
தெழுவாய் தனிவரினொன் றெஞ்சும் - வழுவாத
கோவையும் செய்யுட்கால் குன்றா, பெருகாவென்
றேவினார் தொல்லோர் எழுத்து'.
என்ற வெண்பாவும் காணப்படுகின்றது (பக். 519)

மேலே கூறிய வெண்பா உரையாசிரியர் இயற்றியதா அன்றி வேறு நூலிலிருந்து எடுக்கப்பட்டதா என்பது குறித்து விளக்கம் ஏதும் இல்லை.

யாப்பருங்கலக் காரிகை கட்டளைக் கலித்துறைக்கு இலக்கணம் வகுக்கவில்லை. அந்நூலின் இறுதியில் காணப்படும் 'பிற்சேர்க்கை' என்ற பகுதியில் கட்டளைக் கலித்துறைக்குரிய இலக்கணம் காணப்படுகின்றது.

'அடியடி தோறு மைஞ்சீராகி
முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாது
கடையொரு சீரும் விளங்காய் ஆகி
நேர்பதி னாறே நிரைபதி னேழென்
றோதினர் கலித்துறை யோரடிக் கெழுத்தே'

ஐஞ்சீரடி நான்காய் ஒவ்வோர் அடியினும் முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாமல் இருக்க, இறுதிச் சீர் கூவிளங்காய், கருவிளங்காய் என்பனவற்றுள் ஒன்றாகப் பெற்று முதற்சீரின் முதலசை நேர் ஆயின் ஓரடிக் கெழுத்துப் பதினாறும் நிரையாயின் பதினேழும் உடைத்தாய்

ஏகாரத்தான் முடிவது கட்டளைக் கலித்துறையாகும்.. இஃதும் எழுத்தளவைப் பெறுதலாற்போந்த பெயர். கோவைக் கலித்துறை, திலதக் கலித்துறை என்பன இதன் பெயர்கள். அப்பர் திருவிருத்தமும், நம்மாழ்வார் திருவிருத்தமும் இக்கலித்துறையின் அமைந்தனவாகலின் இதற்கு விருத்தம் என்னும் பெயரும் உண்மை புலனாகின்றது.' (யாப்.காரி.பக்.200) என்ற குறிப்பு காணப்படுகின்றது. மேலே கூறிய நூற்பாவும் விளக்கமும் யாரால் வகுக்கப்பெற்றன என்ற செய்தி நூலில் இல்லை.

கட்டளைக் கலித்துறைக்கு முதலில் இலக்கணம் கூறுவது வீரசோழியமே.

'நெடிலடி நான்கவை நேர்ந்துநின்றேபதி னாறெழுத்தாய்
முடிவன வாம்பதி னேழு நிரைவரின் முன்மொழிந்த
படிவழு வாது நடைபெறு மோசைவண் டேந்திநின்ற
கடிகமழ் கோதைக் கயனெடுங் கண்ணி கலித்துறையே. (122)

என்ற வீரசோழியக் காரிகைக்கு உரையாசிரியர், 'இதனைக் கோவைக் கலித்துறைக்கு இலக்கணமும் இலக்கியமுமாகக் கொள்க', என்று குறிப்பிட்டுள்ளார்.

வீரசோழியம், திலதக் கலித்துறைக்கு

'நேர்முந் துறிற்பதி னாறெழுத் தாகி நிரைமுதலாஞ்
சீர்முந் துறிற்பதி னேழாய் முடிந்துசெப் பாரடிகள்
ஏர்முந்து நான்கொத் திருபது சீரா லியன்றிடுமேல்
நீர்முந்து பேரல்குன் மாதே அஃது திலதமன்றே' (126)

என இலக்கணம் வகுத்துள்ளது.

உரையாசிரியர், 'இந்நூற் சூத்திரம் யாவும் திலதமாதலின் இதனில் ஒன்றையே இலக்கியமாகக் கொண்டாலும் இழுக்காகாது என்று குறிப்பிடுகின்றார். ஆனால் பதிப்பாசிரியர்,

'கட்டளைக் கலித்துறை கோவைக்கலித்துறை எனவும் திலதக் கலித்துறை எனவும் இரண்டு வகையாகும். ...... இவற்றை வேறு படுத்துவான் தொடங்கி நூலாசிரியர் 'நெடிலடி' (122) என முன்னர் போந்த சூத்திரத்தால் கோவைக் கலித்துறையையும் இச்சூத்திரத்தால் திலதக் கலித் துறையையும் உணர்த்தியும் உரையாசிரியர் அவருடைய கருத்துத் தெரியாது ஆண்டு குற்றம் காட்டுவதற்கு எடுத்தோதினார் என மயங்கி 'நெடிலடி' என்னுஞ் சூத்திரத்தையே கோவைத் கலித்துறைக்கு இலக்கணமும் இலக்கியமுமாகக் கொள்க' என்றார். அச்சூத்திரமும் (122) திலதக்கலித் துறையேயாம் அஃது, 'கடிகமழ் கோதைநல் லாய்பன்னு கோவைக் கலித்துறையே' என்று இற்றவழி யன்றோ கோவைக் கலித்துறையாகும். கோவைக்கலித்துறை ஈற்றடி மூன்றாஞ்சீர் சொல் பக்குவிட்டு முற்சீரோடு

ஒன்றி ஒழுங்கியலோசைத்தாய் வரும். இது பேதமறிக. இரண்டாஞ்சீர் நாலாஞ்சீர்களும் அவ்வாறோசை பிரிந்தொழுகின் மிக்க சிறப்புடையதாம். அதனை 'நீரணங் கோநெஞ்ச மேதனி யேயிங்கு நின்றவரே [14] என்னும் பொய்யா மொழிப் புலவர் வாக்கானுணர்க' என அக்கூற்றை மறுத்துரைக்கின்றார்.

மேலும் 'நெடிலடி' (122) என்னும் காரிகையைக் கோவைக் கலித்துறைக்கு இலக்கணமும் இலக்கியமுமாகக் கொள்க' என்று கூறிய உரையாசிரியர், 'நேர்முந்துறிற்' (126) என்று தொடங்கும் காரிகையின் உரையில் இந்நூற் சூத்திரம் யாவும் திலதமாதலின், இதனில் ஒன்றையே இலக்கியமாகக் கொண்டாலும் இழுக்காகாது என்று கூறியிருப்பது முரண்பட அமைந்துள்ளது. இந்நூலின் காரிகை யாவும் திலதக்கலித்துறை என்று கூறி, அக்காரிகைகளில் ஒன்றையே கோவைக் கலித்துறை என்று கூறியிருப்பது பொருத்தமன்று. இரண்டிற்கும் உள்ள வேறுபாட்டை அவர் விளக்கவில்லை.

இலக்கியத்தில் பயின்று வரும் கட்டளைக் கலித்துறை கோவைக்கலித்துறை எனவும் இலக்கண நூலில் பயின்று வருபவை திலதக் கலித்துறை எனவும் பெயர் பெறும் என்று அறிஞர் [15] கருதுவர். 'கட்டளைக் கலித்துறை' என்னும் சொல்லாட்சி வீரசோழியத்தில் இல்லை.

இனித் திலதப் போலியாவது திலதக்கலித்துறைப் பாடல்களில் ஓரோவடியில் ஒன்றாதல் இரண்டாதல் எழுத்து மிக்கும் குறைந்தும் வருவது என்றுரைத்து,

'எனவே தனமென் றிராசேந்திர சிங்கனொ டின்றணைந்த
கனவே யுடையன் களிப்புக்கண் டாற்கட லேழுமமைந்
தனவே யெனவவன் றானுதித் தன்றே தொடங்கியென்று
நனவே புணர்திரு வின்களிக் கேதுகொ னல்லனவே!

என்னும் பாடலைச் சான்றாகத் தந்து 'இது முதலடியெழுத்து மிக்கமையால் திலதப் போலி. இதனை வடவெழுத்தாய் ஒப்புக்கொளின் போலியின்றி விரவியலாகுமென்க [16] என்று விளக்கம் கூறுகின்றார்.

மேற்கூறிய பாடலின் முதலடியில் பதினேழு எழுத்துக்கள் வருவதற்குப் பதிலாகப் பதினெட்டு எழுத்துக்கள் உள்ளன. 'ராசேந்திர' என்னும் சொல் லை ராஜேந்த்ர அல்லது ராசேந்த்ர என்று கொண்டால் பதினேழு எழுத்தாகும்.

நெடிலடி நான்கு கொண்டதாய் நேரசையே முதல் உடையதாயின்அடி ஒவ்வொன்றும் பதினாறு எழுத்துக்களையும் நிரையசையை முதல்

உடையதாயின் பதினேழு எழுத்துக்களையும் கொண்டு விளங்கும்' என இலக்கண விளக்க உரையாசிரியர், கூறுகின்றார் (சூத்.739 இன்-உரை).

தொன்னூல் விளக்கம்,

'கலித்துறை நெடில்அடி நான்கு ஒத்து அவற்றுள்
இடைநேர் வெண்சீர் இயற்சீர் முதல் நான்கு
இடைநிரை வெண்சீர் இறுதிச்சீர் மோனையாகக்
கடையே கொண்டுஇறும் கட்டளைக் கலித்துறை' (241)

'கட்டளைக் கலித்துறையின் முதல் நான்கு சீரும் இயற்சீரும் இடையே நேர்வரும் வெண்சீருமாக வர ஐந்தாம் சீர் நிரையசை இடையில் வரும், வெண் சீராக வந்து முதற்சீரும் ஐந்தாம் சீரும் மோனைத் தொடர்பு பெற்று இயலும் எனக் கட்டளைக் கலித்துறைக்கு இலக்கணம் வகுக்கின்றது. 'இடையே நேர்வரும் வெண்சீருமாக' என்பது மூன்றாம் சீராகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை. அங்ஙனம் இருப்பின் சிறப்பு; முதல் சீருக்கும் ஐந்தாம் சீருக்கும் இடையில் என்று கொள்வது பொருந்தும் என்பது சான்றுப் பாடலை நோக்கின் புலனாகும்.

கந்தாரம் பாடிக் களித்தாடும் வண்டினங் காமுறுபூஞ்
சந்தார நாறு நிழற்சோலைக் காவலூர் தங்கியவா
னிந்தாரம் பூண்ட திருவடி கண்டேத்த வெவ்வுயிரும்
வந்தாரக் காண்பேனோ வானலங் கொண்டார வையகமே.

இப்பாடலின் மூன்றாம் நான்காம் அடியின் மூன்றாம்சீர் கருவிளமாகவும், கூவிளமாகவும் விளங்குவதைக் காணலாம். நெடிலடி நான்காய்ப் பதினேழு எழுத்தும் பதினாறு எழுத்தும் பெற்று வருபவை கட்டளைக் கலித்துறை என சுவாமிநாதம் உரைக்கின்றது. (பக்.253) அறுவகை இலக்கணம்,

"ஈரசை மூன்றசைச் சொற்கள்மிக் கணைந்தும்
ஒவ்வோ ரீற்றில் தேமாந் தண்பூப்
புளிமாந் தண்பூப் புணர்ந்தும், ஐஞ்சீர்
ஆவதோர் அடியாய், நாலடியுடைத்தாய்,
ஈற்றில் ஏயென முடிவது கட்டளைக்
கலித்துறை யாமெனக் கழறுதல் முறையே (33)
'நேரெனத் துவக்கலும் நிரையென எடுத்தலும்
ஆய கட்டளைக் கலித்துறைக் கிடைவரும்
மெய்தவி ரெழுத்தின் தொகைபதி னாறும்
அவற்றொடொன் றணுகலும் ஆமெனப் பகரினும்
சுவையறி வில்லாத் துகளுறு மனத்தினர்

நெடில்குறி லமைவுறும் நிலைபிறழ் வதனால்
கீழ்மை தோய்வுறக் கிளத்தலும் உளவே (34)

என இலக்கணம் உரைக்கின்றது.

மேலேகூறிய நூற்பாவிற்கு உரையாசிரியர் [17] பெரும்பாலான கட்டளைக் கலித்துறையடிகள் காய்ச்சீராலேயே முடியும்; எனினும் மிகச் சிறுபான்மை அங்கு நான்கசைச் சீரும் பயின்று வருதல் உண்டு என்று கூறி,

'செந்தமிழ்ப் பாடற் புலவோ ரநேகர் தினம்பரவும் - எழுத்து 16
கந்தனைத் தென்பழ னாபுரிக் கோயிலில் காணப்பெற்றால் - 16
அந்தரத் தோரும் முனிவோரும் மோகிப்ப தன்றியெழில் - 16
மந்தரக் கொங்கை மடவாரும் ஆசிப்பர் மட்டறவே' - 16

- பழனித்திரு அலங்காரம் 33

என்னும் பாடலை உதாரணமாகத், தந்துள்ளார். இப்பாடலில் இரண்டாம் அடியின் ஐந்தாம் சீர் தேமாந்தண்பூவாக அமைந்திருப்பதைக் காணலாம். இருப்பினும் எல்லா அடிகளிலும் பதினாறு எழுத்துக்களே காணப்படுகின்றன. "இவ்வாறு மிக அருகியே வரும் என்பதால் ஒவ்வோரீற்றிலும்[18] என்றார்". என்று விளக்கம் தந்துள்ளார் (வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் அறுவகை இல்க்கணம் உரையுடன் பக். 287). இத்தகைய யாப்பு வகையை 18, 19 - ஆம். நூற்றாண்டெழுந்த தல புராணங்கள், பதிற்றுப்பத்தந்தாதிகள், கலம்பகங்கள், ஆகியவற்றுள் காணலாம் எனவும் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

அறுவகை இலக்கணத்தின் 34-ஆம் நூற்பா கட்டளைக் கலித்துறையின் எழுத்து வரையறையைக் குறிப்பிடுகின்றது. வெண்பா, கட்டளைக் கலித்துறை ஆகிய இரண்டும் வெண்டளை பெற்றுச் செப்பலோசையில் வரவேண்டும் என்று கூறி, "வெண்பாக் கட்டளைக் கலித்துறை என்னும் இவற்றின் தளையிடை ஏகதேசம் வண்ணப்பாவிற் றய்ய தன்னவே தனவாம் சொல்லின் நேர் நிரையா வரும் அவை உணரா மருண்மனப் புலவோர் வல்லொற் றொருவியும் வகுப்பார் பிழையே" (ஏழாம் இலக். 273) என்ற நூற்பாவைக் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் கட்டளைக் கலித்துறையில் வல்லொற்றுக்கள் மிக அதிகமாகவோ நெருங்கியோ இருக்கக் கூடாதென்பதும் குறில் நெடில்கள் அடுத்தடுத்து வரக்கூடதென்பதும், அங்ஙனம் வந்தால் இயல்பான செப்பலோசை அழியும் என்பதும் புலனாகின்றதென்று சுட்டுகின்றார். (மேற்.பக்.289)

இதுக்காறும் கூறியவற்றிலிருந்து ஐந்துசீர், நான்கடியாய வரும் பாடல்களுள் மூன்றாம் சீர் கனிச்சீர் பெற்று வருபவை காப்பியக்கலித்துறை என்றும், எழுத்தெண்ணிப் பாடப்படுபவை கட்டளைக் கலித்துறை என்றும், எழுத்தெண்ணிச் பாடப்படாதவை கலிநிலைத் துறை என்றும் வழங்கப்பட்டுள்ளன என்பதை அறிய முடிகின்றது. அறுவகை இலக்கணம் கலித்துறைக்கும் கட்டளைக் கலித்துறைக்கும் பிற இலக்கண நூல்களிலிருந்து மாறுபட்ட கருத்தைக் கொண்டுள்ளது. இதுயாப்பின் வளர்ச்சி நிலையைக் காட்டுகிறது. வீரசோழியம் கட்டளைக் கலித்துறையைக் கோவைக் கலித்துறை திலதக்கலித்துறை என இரு வகையாகக் குறிப்பிடுகிறது. கோவைக் கலித்துறை கோவை நூல்களில் பயன்படுத்தப்படுவதால் அப்பெயர் பெற்றதென்ற கி.வ. ஜகந்நாதனின் கூற்றுக்கு மாறாக, கோவைக்கலித்துறைப் பாடலின் ஈற்றிடியின் மூன்றாம் சீர் பக்குவிட்டிசைத்தலால் அப்பெயர் பெற்றுதென்று வீரசோழியம் பதிப்பாசிரியர் காட்டுகின்றார்.

அடிக்குறிப்புகள்

1. 'நெடிலடி நான்காய் நிகழ்வது கலித்துறை' (88)
2. .... 'கலித்துறையே நெடிலடி நான்காய் நிகழ்வது (44)
3. ... 'நெடிலென்றுரைத்த பேரடி நான்கு கலித்துறை' (121)
4. 'நெடிலடி நான்காய் நெறிப்பட நிகழ்வது கலித்துறை' (739)
5. 'கலித்துறை நெடிலடி நான்கு ஒத்து' (241)
6. 'ஐஞ்சீரடி நான்காய் அளவொத்து வருவது கலித்துறை' (950)
7. 'காய்வரு மூன்றசை கலந்தைந் தாகியும்
ஈற்றுச் சீர் கனியாகியும் வரும் அடி
கலிநிலைத்துறைக் கென்றனர் கற்றோர் (35)
8. 'ஐஞ்சீரடியின் அடித்தொகை நான்மையோ
டெஞ்சா தியன்றன வெல்லாங் கலித்துறை'
9. 'ஐஞ்சீர் நான்கடி கலித்துறை ஆகும்'
10. 'ஐஞ்சீர் நாற்சீர் அடிநான்காயின்
எஞ்சாக் கலியின் துறையும் விருத்தமும்"

11. அடிமறி என்பது எல்லாஅடியும் முதல் நடு இறுதியாக உச்சரிப்பினும் ஓசையும் பொருளும் பிழையாது வருவது.

12. மூவா முதலா வுலகம்மொரு மூன்று மேத்தத்
தாவாத வின்பந் தலையாயது தன்னி னெய்தி
ஓவாது நின்ற குணத்தொண்ணிதிச் செல்வ னென்ப
தேவாதி தேவ னவன்சேவடி சேர்து மன்றே
(சீவ, கடவுள் வாழ்த்து)

13. 15,16,19,20,22,23,24,27,28,29.

14 ‘பாரணங் கோதிருப் பாற்கடல் ஈன்றபங் கேருகத்தின்
ஓரணங் கோவெற் புறையணங் கோஉயிர் பாவலர்க்கு
வாரணங் கோடி தருந்தஞ்சை வாணதென் மாறைவையை
நீரணங் கோநெஞ்ச மேதனி யேஇங்கு நின்றவரே! (தஞ்.கோ.2)

15. த.வே. கோபாலையர், பிரெஞ்ச் இன்ஸ்டிடியூட் ஆப்இன்டாலஜி, பாண்டிச்சேரி.

16. வடவெழுத்து விரவுவது விரவியல்.

17. ப.வெ. நாகராஜன், தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

18. ஒவ்வோரீற்றில் என்றால் ஏதாவது ஒவ்வொரு அடியின் ஐந்தாம் சீரில் என்று பொருள் கொள்ள வேண்டும் ஒவ்வோரீற்றிலும் என முற்றும்மை தரக்கூடாது

துணைநூல் பட்டியல்

1. இளங்குமரன் இரா.(பதிப்), யாப்பருங்கல விருத்தி, கழக வெளியீடு, சென்னை, முதல் பதிப்பு , 1973.

2. கோபாலையர் த.வே. (பதிப்), இலக்கண விளக்கம் - செய்யுளியல் தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு, தஞ்சாவூர், முதல் பதிப்பு, 1974.

3. கோவிந்தராச முதலியார் கா.ரா. (பதிப்), வீரசோழியம், கழகவெளியீடு, சென்னை, இரண்டாம் பதிப்பு, 1970.

4. சண்முகம் செ.வை. (பதிப்), சுவாமிநாதம், அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடு, அண்ணாமலைநகர், முதல்பதிப்பு 1975.

5. சுந்தர மூர்த்தி (பதிப்), முத்து வீரியம், கழக வெளியீடு, சென்னை, முதல் பதிப்பு, 1972.

6. சுப்பிரமணியன் ச.வே. தொன்னூல் விளக்கம், தமிழ்ப் பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, 1978.

7. தண்டபாணி சுவாமிகள் அறுவகை இலக்கணம், பேரூராதீனம், பேரூர், முதல்பதிப்பு, 1978

8. நாகராஜன் ப.வெ., (உரை), வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகளின் அறுவகை - இலக்கணம், தமிழ்ப்பல்கலைக்கழக வெளியீடு, தஞ்சாவூர், முதல்பதிப்பு, 1991.

9. வேங்கடசாமி நாட்டார் ந.மு., யாப்பருங்கலக் காரிகை, கழக வெளியீடு, சென்னை, பத்தாம் பதிப்பு, 1969.

Book Review

Title : Panini (His work and its traditions : vol 1. Background and Introduction).

Author : George Cardona

Publisher : Motilal Banarsidass, Delhi.

Year : 1988

Pages : XXIV + 671

As the subtitle and the introduction suggest, this book is the first part of a large study of *Panini's* work, the *Astadhyayi,* and its *antecedents* and the traditions of interpretation and analysis to which it gave rise.

Four chapters with two appendices make the present volume. They are (1) Panini's work (2) Panini's derivational system (3) General principles observed in the grammar and (4) The Background of Panini's system. Each chapter, for easy handling and clear comprehension is divided into many sections and subsections. These and the paragraphes contained there in are numbered for easy reference and cross reference.

The two appendices are (1) The status and purpose of Grammar and (2) Terms for the launguage described and for the grammar and its components.

Being a linguist and with much root and footing in traditional Indian grammar, the author, George Cardona, a specialist in Indo European langauges, presents an advanced thesis here with much insight into Panini and his theories and the interpretation of the commentators who followed in his footstep.

For those well versed in Panini and the rules of Sanskrit Grammar, this book is a treasure house of information. But for a learner beginner it is most mysterious and puzzling, because of its indepth study. To an ardent lover- research student of Tamil Grammar this work will provide the ground to help comparing Tolkappiyam and Astadhyayi.

Panini's Astadhyayi contains nearly fourthousand sutras distributed among eight chapters, each of which is subdivided into four quarter-chapters (p. 3). The text is accompanied by three ancillary texts : The first of these (aksara samamnaya) is an ordered set of sounds; the second (dhatupatha) is a catalogue of verbs; the last

(ganapatha) consists of sets of other items pertinent to provisions given in particular sutras (p.1)

The term 'sutra', which in ordinary Sansk rit means thread (p. 670) may refer to an individual statement in a treatise (p.667) or to a corpus of rules (p.671). According to a traditional verse, a sutra has the following characteristics: "It has a few syllables, without inserted meaningless useless terms, and contains what is essential, yet applies with reference to the most instances possible, and is not subject to doubt, it is without fault" (p.670). This can be compared with what the Tamil grammar Tolkappiayam say about Cuttiram:

> With the afore said form and content,
> A verse of few letters
> Pregnant with meaning, while recited,
> Being subtly clear
> Unmovably strong
> Unmeasurably deep in matter
> Of selected varied utility-
> Is the nature of the 'Sutra'
> So say the learned (Tol. 1600; my translation)

'A composition of few words, pregnant with loft ideas, containing many meanings' seems the common definition to sutra asper Tolkappiyam and Astadhyayi.

The immediate object of a grammar like Panini's was to describe correct speech froms, which are refered to as laksya, that is, as targets which are to be characterized by means of grammatical rules.The rules that serve this purpose are then refered to as laksana (p.671). The parallel words in Tamil, viz, ilakkiyam and ilakkanam are found only in later grammars.

Nowhere Panini says that he does a grammar for the Sanskrit Language:

> In the Astadhyayi Panini uses bhasayam (in spoken language) opposed chandasi (in sacred litrature), but he *does not refer to the language he describes by terms such as samskrtam or samskrta vak* (adorned, purified speech) (p.3)

Similarly, Tolkappiyam does not say that it writes a grammar for the Tamil language; only in the foreword (Payiram) there is mention to it, by some one else.

The author of the present work, appends his remarks to the discussions about Panini's derivations and also where ever they are nececssary (p.2,5,9...).In these he tries to make more clear certain usages of Astadhyayi and his own commants and conclusions. Some times such remarks are short (P.226), but sometimes they run to Pages (p.576-579). Further readings on the matter are also given here and there under 'remarks' (p.598).

In toto, this book is an useful introduction to Panini and his contribution to the language study.

– ANNIE THOMAS

நூல் மதிப்புரை

நூல்	:	நாமக்கல் இராமலிங்கம் பிள்ளை
ஆசிரியரும் மொழிபெயர்ப்பாளரும்	:	கி.ர. அனுமந்தன்.
வெளியீடு	:	சாகித்திய அக்காதெமி புது தில்லி
ஆண்டு	:	1988
பக்கங்கள்	:	140.
விலை	:	ரூ. 5/-

இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் நாமக்கல் கவிஞர் என்று சிறப்பாகப் பாராட்டப்பெற்ற இராமலிங்கம் பிள்ளையைப் பற்றி சாகித்திய அக்காதெமி நூல் வெளியிட்டுள்ளது. இந்நூலாசிரியர் கி. ர. அனுமந்தன் கவிஞரின் மூத்த மருமகனாக இருப்பது இந்நூலின் சிறப்பு . அத்துடன் இந்நூலின் ஆங்கில மூலத்தை எழுதியவரும் தமிழ்மொழிபெயர்ப்பாளரும் இவரே. மொழிபெயர்ப்பு சிக்கல்கள் இல்லாமல் ஆசிரியர் என்ன சொல்ல நினைத்தாரோ அதனை எளிமையாக இந்நூலில் காணமுடிகின்றது.

கவிஞர்கள் பல கவிதைகளைப் படைத்தாலும் ஏதாவது ஒரு கவிதைதான் அவர்களை வெளி உலகுக்கு நன்கு அறிமுகப்படுத்துகிறது. இதற்குப் பலரை எடுத்துக்காட்டாகக் கூறலாம். பாரதிதாசனை "எங்கெங்கு காணினும் சக்தியடா – தம்பி

ஏழுகடல் அவள் வண்ணமடா" என்ற கவிதைதான் சமுதாயத்திற்கு வெளிக்கொணர்ந்தது. அதேபோல் "கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது" என்ற பாடல்தான் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையை ஊரறியச் செய்தது. இப்பாடலை அவர் பாடுவதற்கு முன்பே பல பாடல்கள் இயற்றி இருந்தாலும் இந்தப் பாடல் இயற்றப்பட்ட சூழல் - பாடலின் உள்ளார்ந்த பொருள் இவரை மக்களுக்கு அறிமுகப்படுத்தியது.

முதல் அரசவைக் கவிஞர் என்ற சிறப்புடன் வாழ்ந்து மறைந்த அப்பெரும் கவிஞரின் வாழ்க்கை வரலாற்றை இந்நூல் நான்கு இயல்களில் எடுத்துரைக்கின்றது. வாழ்க்கை வரலாறு, கவிதைப் படைப்புகள், உரைநடைப் படைப்புகள், தமிழ் இலக்கியத்தில் கவிஞர் பெற்றுள்ள இடம் ஆகிய நான்கு இயல்களில் பல உட்தலைப்புகளில் கவிஞரைப் படம் பிடித்துக் காட்டியுள்ளார். ஆசிரியர் கவிஞரின் மருமகனாக இருப்பதால் அவரைப் பற்றிய பல தகவல்களை எளிமையான முறையில் எடுத்துச் சொல்ல முடிந்திருக்கின்றது. முதல் இயலில் கவிஞரின் பிறப்பு முதல் இறப்பு வரை உள்ள காலத்தின் முக்கிய வளர்ச்சி நிலைகள் கூறப்பட்டுள்ளன. 1888 இல் பிறந்து 1972-இல் மறைந்த கவிஞரின் காலகட்டம் இந்தியரின் அடிமைத்தனத்தையும் சுதந்திரத்தையும் உள்ளிட்டது.

கவிஞரின் தாயார் அம்மணி அம்மாளின் குணநலன்களும் அவர் இராமலிங்கம் பிள்ளையை வளர்த்த விதமும் சுவைபடக் கூறியுள்ளார். கவிஞரின் பள்ளி வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவங்கள், பள்ளியிறுதித் தேர்வில் நுழைய கணிதத்தில் குறைந்த மதிப்பெண்கள் பெற்றது, பிறகு 1907 -ல் அவர் அத்தேர்வில் வெற்றி பெற்றது என ஒவ்வொன்றாகக் கூறிச் செல்கின்றார்.

இவரைத் தமிழகம் ஒரு கவிஞராக மட்டுமே நினைத்து வந்தது. இந்நூல் "நாமக்கல் கவிஞர்", கவிஞர் மட்டுமல்லாமல் சிறந்த ஓவியர் என்பதனையும் தெளிவாக்கியுள்ளது. பணத்திற்காகவும் ஆன்மிக மனநிறைவுக்காகவும் பல ஓவியங்களைக் கவிஞர் தீட்டியுள்ளார். பொருளாதாரச் சிக்கல்களைப் போக்க ஓவியத்திறமை பயன்பட்டிருப்பதை இந்நூலில் அறிய முடிகின்றது. கவிதை இயற்றும் திறமை இவருக்கு இளமையிலேயே இருந்ததற்கு சிறந்த எடுத்துக் காட்டாக ஒரு நிகழ்ச்சியைக் கூறுகின்றார்:

நாமக்கல்லில் கூத்துப் பார்க்கச் செல்கின்றார் கவிஞர், கூத்தில் கோமாளி வந்து "கூத்துப் பார்க்க வந்தீங்களா இங்கு குசலம் பேச வந்தீங்களா" என்று கூட்டத்தினரை நோக்கி சப்தம் போடாமல் இருக்கச் சொல்கிறான். கூத்து முடிந்தவுடன் வீட்டிற்கு வருகிறார். வீட்டில் தமக்கையாரும் மைத்துனியும் சண்டைப் போட்டுக் கொண்டு இருந்தனர். உடனே,

"சாதம் போட வந்தீங்களா இங்கு
சண்டை போட வந்தீங்களா."

என்று பாடினார். என்ற செய்தி நாமக்கல் கவிஞரின் கவிதைத் திறமையை எடுத்துக் காட்டுகின்றது. இவ்வாறு தொடங்கிய இவரது கவிதை 1930 -இல் உப்பு சத்தியாகிரகத்தின் போது எழுதப்பட்ட "கத்தியின்றி இரத்தமின்றி" என்ற பாடல்மூலம் இவரை தேசிய கவிஞராக்கியதைக் காணமுடிகின்றது. இப்பாடலைக் கேட்ட ராஜாஜி, பாரதியார் இல்லாத குறையை நாமக்கல் கவிஞர் தீர்த்துவிட்டார் என்று பாராட்டியுள்ளார். தொடக்கத்தில் தீவிரவாதியாக இருந்த கவிஞர் பிறகு காந்திய நெறியில் ஈர்க்கப்பட்டார். குழந்தைப்பேறு இல்லாத நிலையிலும் மறுமணத்தைக் கடிந்தார். மனைவியின் வேண்டுகோளுக்கு இணங்க அவர் இறந்த பின்பு மறுமணம் புரிந்துக்கொண்டார். பொதுவாக எல்லா கவிஞருக்கும் இருக்கும் பொருளாதார நெருக்கடி இவருக்கும் இருந்தது. இவருடைய நூல்களை வெளியிட்டு நிரந்தர வருவாய் ஏற்படுத்த நினைத்தவர்கள் எதிர்பாராத நிலையில் செயல்படுத்த முடியாமல் இருந்த துயரத்தை "வறுமையும் புலமையும்" என்ற துணைத்தலைப்பில் வெளியிடுகின்றனர்.

"பலே பாண்டியா! பிள்ளை நீர் ஒரு புலவன் ஐயமில்லை" என்று பாரதியார் பாராட்டியமை கவிஞரின் சிறப்பினை நன்குணர்த்தும். இவர் எழுதிய " மலைக்கள்ளன்" நாவல், "என் கதை" என்ற தன்வரலாறு ஆகியன சிறந்து விளங்குகின்றன. 1971 -இல் "பத்மபூஷன்" விருதுபெற்று கவிஞர் தமிழின் பெருமையை உயர்த்தினார். 1972 -இல் மாரடைப்பால் இறந்தார்.

கவிஞரின் இலக்கியப் படைப்புகள் என்ற இயலில் அவரது படைப்புகள் விளக்கப்பட்டுள்ளன. தேசபக்திப் பாடல்கள், தெய்வ பக்திப் பாடல்கள் பல இயற்றியுள்ளார். இந்தியத் தாய் புலம்பல் என்ற கவிதைத் தொகுதியில் இந்தியாவின் அடிமைநிலையை நன்கு எடுத்துரைக்கின்றார் கவிஞர். "தமிழனென்று சொல்லடா, தலை நிமிர்ந்து நில்லடா," "தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அவர்க்கொரு குணமுண்டு" என்று வீரமுடன் கூறியவர் கவிஞர். இவருடைய பாடல்கள் பாரதியார் பாடல்களுக்குக் குறைந்தவை அல்ல என்பதை உணரமுடிகின்றது.

கவிதை நூல்கள் அன்றி உரைநடை நூல்கள் பலவும் இவர் இயற்றியுள்ளார். மலைக்கள்ளன், தாமரைக் கண்ணி, கற்பக வல்லி போன்ற புதினங்கள் குறிப்பிடத்தக்கன. மேற்கூறிய புதினங்கள் கதைச்சுருக்கம் தந்து அதிலிருந்து கவிஞர் சொல்லவந்த கருத்துக்களை எடுத்துக் காட்டியுள்ளார் ஆசிரியர். கவிஞர் எழுதிய அரவனை சுந்தரம், மாமன் மகள் போன்ற நாடகங்கள் "தமிழ்மொழியும் தமிழரசும்", "ஆரியராவது திராவிடராவது", போன்ற கட்டுரைகள் இவருடைய புலமைக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றன. திருக்குறளுக்கு இவர் எழுதிய உரை மிகுந்த

எதிர்ப்புக்குள்ளானது. அதனை நிறுவ இவர் எழுதிய "திருவள்ளுவர் திடுக்கிடுவார்", "திருவள்ளுவரும் பரிமேலழகரும்", "திருவள்ளுவர் இன்பம்", "வள்ளுவர் உள்ளம்", ஆகிய நான்கு நூல்கள் இவர் திருக்குறளின் மீது கொண்ட ஈடுபாட்டினை நன்கு விளக்குகின்றன.

இறுதியாக தற்காலத் தமிழ் இலக்கிய வரலாற்றில் பலரும் பொறாமைப்படத்தக்க தனிப்பட்ட ஓர் இடத்தை அவர் பிடித்துக் கொண்டுள்ளார் என்றால் அது முற்றிலும் பொருத்தமான ஒன்றே ஆகும் என்கிறார் நூலாசிரியர். நூலின் இறுதியில் கவிஞரின் சிறந்த கவிதைகள் சிலவற்றைத் தந்துள்ளார்.

ஒரு தனிப்பட்ட கவிஞரின் வாழ்க்கை, தொடக்கம் முதல் இறப்புவரை உள்ள நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒரு நூலில் கூறிவிட முடியாததுதான். எனினும் இந்நூல் தேவையானவற்றைத் தெளிவுறுத்தும் நோக்கில் அமைந்துள்ளது. கவிஞரின் படைப்புகள் பற்றிய விரிந்த விளக்கங்கள் பயன்தருகின்றன. நூல் சிறந்த நூலாக வெளிவரக் காரணமாக அமைந்த சாகித்திய அக்காதெமியினர் பாராட்டுக்குரியவர்.

ந. கடிகாசலம்

நூல் மதிப்புரை

நூல்	:	தியாகராசர்
ஆசிரியர்	:	வி. இராகவன் (ஆங்கில மூலம்)
தமிழாக்கம்	:	பொன். சவுரிராஜன்
வெளியீடு	:	சாகித்திய அக்காதெமி, புதுதில்லி.
ஆண்டு	:	மு. ப. 1988
பக்கங்கள்	:	90
விலை	:	ரூ. 5/-

இசைமேதை தியாகராசருக்குச் சாகித்திய அக்காதெமி செய்யும் அஞ்சலியாக இந்நூல், அதன் இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் அமைந்துள்ளது.

தியாகராசரும் கர்நாடக இசை மரபும், தியாகராசரின் வாழ்க்கை, தியாகராசரின் சாதனைகள் என மூன்று தலைப்புகளில் அமையும் இந்நூலுக்குப் பேராசிரியர் சீனிவாச ஐயங்கார் முன்னுரை வழங்கியுள்ளார்: 900 ஆராய்ச்சிக் கட்டுரைகளும் 110 நூல்களும் படைத்த வி. இராகவன் அவர்களின் இறுதி நூல் இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

"தியாகராசர் (1767 - 1847) கர்நாடக இசையை உருவாக்கியவர்களில் தலைசிறந்தவர். உயர்ந்த பாடகர்; இராம பக்தர்; ஏறக்குறைய அறுநூறு கீர்த்தனங்களையும் இரண்டு இசை நாடகங்களையும் இயற்றியுள்ளார். நெஞ்சில் நிற்கவல்ல வருணனைகள்; கவிதைக் கற்பனைகள்; உவமைகள்; எடுத்துக் காட்டுகள்; ஒப்புமைகள்; நகைச்சுவை; அங்கதம்; உலகியல் பழமொழிகள்; நீதிபோதனைகள் அமையப்பெற்று, தியாகராசரின் கீர்த்தனைகள் தரம்குறையாத் தங்கச் சுரங்கமாகவே விளங்குகின்றன. யாவரும் அறிந்து கற்கக் கூடியவை. சாதகம் பண்ணுவோரை இக்கீர்த்தனைகள் பெரிதும் கவர்ந்தன. முன்படைப்புக்களெல்லாம் தியாகராசரை உருவாக்கின; அவருக்குப் பின் தோன்றிய மற்றும் இந்நூற்றாண்டுப் படைப்புக்கள் அவர் கீர்த்தனைகளை மாதிரியாகப் பின்பற்றி எழுந்தன. இவ்வகையில் தெலுங்கு இலக்கியத்தில் தியாகராசரின் நிலை சமஸ்கிருதத்தில் காளிதாசரோடு ஒப்பிடும் அளவுக்கு உயர்ந்ததாகும்" எனும் வெளியீட்டாளர் கருத்தை மெய்ப்பிக்கும் வகையில், விளக்கிச் செல்லும் வகையில் நூல் அமைந்துள்ளது.

கர்நாடக இசைக்குச் சத்குருவாக விளங்கும் தியாகராசர் காவேரி படுகைக்குக் குடியேறிய தெலுங்குப் பிராமணர் குடும்பத்தைச் சேர்ந்தவராவார். இவர் இரண்டு நூற்றாண்டுக்கு அண்மையில் வாழ்ந்தவராயினும் உறுதியான வரலாற்றுக் குறிப்புகள் இல்லை. இவரது பாடல்களில் உள்ள தன் வரலாற்றுக் குறிப்புகளே இவரை அறிமுகப்படுத்துகின்றன. இருபத்து நாலாயிரம் பாடல்கள் தியாகராசர் இயற்றியதாகக் கூறப்படுவது, இருபத்து நாலாயிரம் சுலோகங்கள் கொண்ட இராமாயணம் இயற்றிய வால்மீகிக்கு அடுத்து வைத்து எண்ணுதற்காகவேயாம். தமது 21 ஆவது வயதில் 96 கோடி முறை இராமநாமத்தை ஜெபிக்கும் விரதத்தை முற்றுவித்த போது இராமபிரான் அவருக்குக் காட்சியளித்ததாகவும் அப்போது பாடிய "எல நீ தயராது" எனும் கீர்த்தனையே முதலாவதாகப் பாடியதாகவும் கருதுவார் உண்டு. இவரின் கையெழுத்துப் படிகள் வாலாஜாபேட்டை வெங்கடரமண பாகவதரால் தொகுக்கப்பட்டு நமக்குக் கிடைத்துள்ளன.

'தியாகராஜ உபநிஷத்' என்று போற்றப்படுமளவிற்குச் சிறப்புப் பெற்றுள்ள இவரது படைப்புகளின் சாதனைகள் மிகவிரிவாக விளக்கம் பெற்றுள்ளன. பல்லவிக்குச் சங்கதிக் கலையைப் பொருந்துமாறு உருவாக்கி அசாதாரணமான ஆற்றலை அதற்கு அளித்து திறனை வெளிக்காட்டியுள்ளார். ஒருபொருட் பன்மொழிகளும் சிலேடைகளும் கீர்த்தனைகளை வளப்படுத்துகின்றன. அனைத்துவகை முன்னொட்டுக்களுடனும் ஒரு சொல்லைப் பாடல் முழுவதும் தொடர்ந்து பயன்படுத்துகின்ற மொழி வளமும் நிறைந்துள்ளன என்பனவற்றைச் சான்றுகளுடன் நூலாசிரியர் இயம்பியுள்ளார்.

வால்மீகி படைத்துக்காட்டும் அனந்த கல்யாண குணங்களும் நிரம்பிய இராமவடிவம்; பரம்பொருள் இராமனே; பரப்பிரம்மத்தைக் குறிக்கும் சொல்லே இராமன் எனும் முந்நிலைகள் அவரது கீர்த்தனைகளை ஆட்சி செய்கின்றன. யமுனை நதிக்கரையில் கிருஷ்ணன் கோபியருடன் நிகழ்த்திய படகு உலாவான, "நவுகா சரித்திரம்"என்பதும் பக்தப் பிரகலாத சரித்திரமும் இவரால் நாடகமாகப் புனையப்பட்டுள்ளன. இவை தற்காலத்திய ஆய்வாளர் கூறும் இசை-நாடகத்தோடு பொருந்தாது. மேடைகளில் கீர்த்தனைகளாகப் பாடப்பெறும் முறைமையிலேயே அமைந்துள்ளன. முதல் நாடகம் வங்காள கிருஷ்ணபக்தி நெறியிலிருந்து பெற்ற "நருகா – விலாச" அல்லது "நௌவிகா" என்னும் இலக்கிய வகையைப் பின்பற்றியது.

இவரது கீர்த்தனைகள் அனைத்தும் "திவ்ய நாம சங்கீர்த்தனைகள்", "உற்சவ சம்பிரதாயக் கீர்த்தனங்கள்", "கீர்த்தனைகள் அல்லது கிருதிகள்" என்ற மூவகையுள் அடங்குகின்றன. பின்னதே மிகுதியாக அமைகின்றது. இவற்றுள் பெரும்பாலனவை கதை பொதிபாடல்களாகின்றன. இராமாயண இதிகாசம் முழுமையும் பரவிக் கிடக்கின்ற கிளைக்கதைகள், கதை நிகழ்வுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவை. இதனால் சில ஆர்வலர்கள் தியாகராசர் தம் பாடல்களில் ஓர் ஒழுங்கான இராம நாடகத்தைத் தொடர்ந்து உருவாக்கி உள்ளதாகக் கற்பனை செய்கிறார்கள். சிலர் "சீதா ராம விஜயம்" என அத்தொகுப்பிற்குப் பெயரிடுகின்றனர். எனினும் இது பொருந்தாது. பெரும்பகுதியான பாடல்கள் ஒன்றுக்கொன்று தொடர்பின்றித் தனித்தனியாக அமைந்துள்ள கிருதிகளே.

பல்லவி, அனுபல்லவி, சரணம் என்னும் மூன்று உறுப்புகளோடு முழுமைத் தன்மை கொண்டுள்ள இவரது கீர்த்தனைகளில் தொடர் ஒப்புமைகளையும், எண்ணற்ற விளக்கங்களை விவரிப்பதையும் மிக இயல்பாகக் காணலாம். பாடற் கருத்து, வளைவு நெளிவு இன்றி தெள்ளத்தெளிவாக அமைந்திருக்கும். படிப்படியாக முழுமையாகக் கருத்தை மலர்விக்கும் துல்லியமான நெறியைக் காணலாம். முதற்கட்டமாகப் பல்லவியில் கருத்தை அமைப்பார். பின் அனுபல்லவியில் அதன் கருத்தை வளர்ப்பார். அதற்கேற்ப எண்ணிக்கையில் மிகுந்தோ குறைந்தோ அமைந்துள்ள சரணங்களில் தக்க துணைக் கருத்துகளால், விளக்கங்களால், விவாதங்களால், ஒப்புமைகளால் அக்கருத்து விளக்கம் பெற்றிருக்கும்.

தம் பாடல்களில் பக்தியைப் பொழிந்து வைத்திருப்பதோடு பக்திக்குச் சிறந்த விளக்கமும், அதன் பல்வேறு வடிவங்களையும் காட்டியுள்ளார். ஒன்பான் சுவைகளும் நிரம்பியதாய்க் கிருதிகள் அமையவேண்டுமென்பது அவரது எண்ணம்.

இராம பக்திக்கும் இசைப்பாடலுக்கும் வால்மீகியையே குருவாகக் கொண்டு போற்றியுள்ள தியாகராசரின் பெருமையை நூலாசிரியர் மிகச் சிறப்பாக

இயம்பியுள்ளார். அவரது இலக்கியப் படைப்புத்திறன் தக்க சான்றுகளுடன் புலப்படுத்தப்பட்டுள்ளது. தம்மாய்வில் உண்மைக்குப்புறம்பான கருத்துகளையும் தெளிவான சான்றுகளுடன் மறுத்துரைத்திருப்பது சுட்டத்தக்கது. தாம் மிகத் தேர்ந்த நூலாசிரியர் என்பதை ஐயமற உறுதிப்படுத்தியுள்ளார். நூல் வெளியீட்டாளரின் வெளியீட்டு நோக்கை இந்நூல் நன்கு நிறைவேற்றியுள்ளது என்பதில் ஐயமில்லை.

— ச. சிவகாமி

நூல் மதிப்புரை

நூல்	:	பவபூதி
ஆசிரியர்	:	ஜி. கே. பட் (ஆங்கில மூலம்)
தமிழாக்கம்	:	ஆர். ரங்காச்சாரி
வெளியீடு	:	சாகித்திய அக்காதெமி, புதுதில்லி
ஆண்டு	:	மு. ப. 1988
பக்கங்கள்	:	108
விலை	:	ரூ.5 /-

சாகித்திய அக்காதெமியின் "இந்திய இலக்கியச் சிற்பிகள்" வரிசையில் மலர்ந்துள்ள பயனுள்ள நூல்.

பவபூதியின் இயற்பெயராய்வுடன் தொடங்கும் நூல் ஆறு தலைப்புகளில் அவ்வடமொழிக் கவிஞரின் வரலாற்றையும் படைத்த நூல்களையும் ஆய்வுக் கண்ணோட்டத்துடன் மிக நுணுக்கமாக ஆய்ந்து, தெளிவாகச் செய்திகளை வரிசைப்படுத்தியுள்ளது.

கல்விமிக்க, புரோகித அந்தணக் குடும்பத்தைச் சார்ந்த பவபூதி கி.பி. 8ஆம் நூற்றாண்டினர். பவபூதியின் சொந்த உறவினரும், குடும்ப நண்பர்களும், அவருடைய இலக்கிய முயற்சிகளையும், அக்காலத்தில் சமூகத்தில் மிகவும் கீழ் நிலையினராகக் கருதப்பட்ட நடிகர்களோடு பழகுவதையும் வன்மையாய்க் கண்டித்திருக்க வேண்டும். இதனால் மிகவும் மனம் நொந்த பவபூதி, சொந்த ஊரான பத்மபுரத்தை விட்டு பத்மாவதிக்கும் கல்பிக்கும் அலைந்து இறுதியாகக் கனோஜ் அடைந்து யசோவர்ம அரசனின் ஆதரவில் அங்கே நிலைத்திருக்க வேண்டும் என்பது ஆசிரியர் துணிவு.

பவபூதியின் நூல்களில் நமக்குக் கிடைப்பன மஹாவீர சரிதம், மாலதி மாதவம், உத்தரராம சரிதம் எனும் மூன்று நாடகங்கள் மட்டுமே. இவற்றில் காணப்படாத பல செய்யுட்கள் ஸம்ஸ்க்ருதத் தொகை நூல்களில் அடங்கியுள்ளதால் மற்றும் பல

நூல்களை அவர் எழுதியிருக்க வேண்டும் என ஊகிக்கலாம். இம்மூன்று நூல்களும் தனித்தனியே ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

வால்மீகியின் தெய்வாம்சக் கவிதையின் அசாதாரண ஈர்ப்பும், அழகும் பவபூதிக்குத் தனியாய் இருந்த இராம பக்தியும் "மஹாவீர சரித" நாடகத்தை முதலில் படைக்கத் தூண்டியது. கையெழுத்துப் பிரதிகளின் சான்றினாலும், ஸம்ஸ்க்ருத உரையாசிரியர்களின் கூற்றினாலும் அவர் அங்கம் 5, பாட்டு 46 வரை மட்டுமே எழுதினதாகத் தோன்றுகிறது. எஞ்சிய பகுதி பிறரால் எழுதப்பட்டது. பவபூதி ஆதிகாவ்யக் கதையின் பொதுவடிவை அப்படியே வைத்துக்கொண்டு, தன்னுடைய நாடக இயல்பிற்கு ஏற்ப சில பெரிய மாற்றங்களை இதில் செய்துள்ளார். அவற்றுள் ஒன்று பல நிகழ்ச்சிகளை ஒரே இடத்தில் நடக்கச் செய்வது; இரண்டு செயல் ஒருமைப் பாட்டுக்காக பல நிகழ்ச்சிகளுக்கிடையே தொடர்பை உண்டாக்குகிறார்; மூன்றாவதாக நாடகம் முழுவதையும் வீரச்சுவையே ஆட்சி செய்கிறது எனச் சுட்டி இவற்றிற்குத் தகுந்த, தெளிவான விளக்கங்களையும் ஆசிரியர் தந்துள்ளார்.

பவபூதி செய்த பல மாற்றங்கள் பிரச்சனைக்குரியவையாகவும், இலக்கிய நயமின்றியும் உள்ளன. அதிகமான கதைக்கூற்று, திரைக்குப் பின்னால் இருந்தோ இடைநிலை நிகழ்ச்சிகளாகவோ வரும் செய்திகள் இவை நாடகத் தன்மையைக் குறைத்து விடுகின்றன. ஆயினும் இம்முதற் படைப்பில் அவருக்குள்ள சொல்லேற்றம், அசாதாரண விவரணங்களில் தோன்றும் கற்பனைத் திறம், நுண்ணிதான மனப்பாங்கு - உணர்ச்சி வேகம் - இவைகளைச் சொல்லில் நன்கு சிறைப்படுத்தும் சக்தி இவையெல்லாம் தெள்ளத் தெளிவாகப் புலனாகின்றன என்பது ஆசிரியர் முடிவு.

இரண்டாவதான மாலதி மாதவம் ஸம்ஸ்க்ருத நாடக இயலில் ப்ரகரண வகையைச் சார்ந்தது. இந்நாடகக் கதைக்கருவிற்குக் குணாட்டியரின் "ப்ருஹத்கதை" உந்துதல் அளித்திருக்கலாம். நாடகத்தின் முன்னுரையில் நல்ல காவியத்தில் இருக்க வேண்டிய சில அம்சங்களைப் பவபூதி விவரிக்கின்றார். இந்நாடகத்தின் கதைக்கோப்பும் மிக அதிகமானத் தற்செயல் நிகழ்வுகளால் குறைபாடுடையதே. எனினும் இந்நாடகத்தின் ஈர்ப்புக்கு முக்கிய காரணங்கள் – காதலும் சாகஸமும் நிறைந்த கதை, காபாலிகர்களின் அசாதரணமான சித்திரம், அவர்களின் நரபலிக் காட்சிகள், அச்ச, வெறுப்பு உணர்ச்சிகளுக்கு வாய்ப்பான மயான பூமிக் காட்சி – பவபூதியின் வளமான கவிதை என உரைப்பர்.

"உத்தரராம சரிதம்" கவிஞனின் முதிர்ந்த மதிக்கு அடையாளமான யாவற்றையும் பெற்றுள்ளது. ஒரு நாடகத்தைப் புற நிகழ்ச்சிகளாலும், விளைவுகளாலும் படிப்படியாக உயர்த்துவதற்கு மாறாகப் பவபூதி, மனிதன் உள்ளத்தை நுண்ணியதாய் ஆய முற்பட்டு, தன்னுடைய நாடகக் கோப்பை உள - இயலைச் சார்ந்த செயல்களாலும் பாத்திரங்களின் பாதிப்புகளாலும் நெய்துள்ளார். வால்மீகியின் இதிஹாசத்திற்கு

மாறாகப் பவபூதியின் நாடகமோ அன்புடைத் தம்பதியினரின் நிலைத்த இன்பச் சேர்க்கையோடு நிறைவு பெறுகிறது. சமூக சமயக் கோட்பாடுகள் அன்று ஆணுக்குப் பட்சபாதகமாக இருந்த போதிலும் அநீதி இழைக்கப்பட்ட பெண்ணுக்கு நீதி வழங்குவது கவிதைக் கலைக்கு ஓர் உயரிய கடமை என்பதை இதனால் அறிவுறுத்துகிறார் பவபூதி.

உத்தரராம சரிதத்திலும் குறைகள் தென்படினும் அவருடைய கலைநயம் மிக்க கற்பனையும் உருவமும், மானுட உள்ளத்தின் ஆழ்ந்த உணர்வுகளை அவர் நுண்ணியதாய் அறிந்துள்ளதும், அவருடைய கற்பனையின் விரிவும், இராம கதைக்கு அவர் அளித்துள்ள ஆழ்ந்த பொருள் பொதிந்த நோக்கமும் இவை எல்லாக் குறைகளுக்கும் அபிரிமிதமான ஈடு ஆகி, ஸம்ஸ்க்ருத இலக்கியத்தில் மிகவும் நேர்த்தியான கருவூலங்களிலே ஒன்றாக இந்நாடகத்தை ஆக்கிவிடுகின்றன.

பின்வரும் இறுதி இரு இயல்கள் பவபூதியின் படைப்பாற்றலையும் உளப்பாங்கையும் ஆராய்கின்றன. படைப்பாற்றலில் அவர் காட்டியுள்ள வளர்ச்சியைச் சிறப்பாக எடுத்துக்காட்டும் ஆசிரியர், பிற வடமொழிக் கவிஞரோடு ஒப்பிட்டு, "பவபூதி இயற்றியவை நாடகக் கவிதைகளே – அரங்க நாடகங்கள் அல்ல. ஒருவகையில் அவர் ஒரு புதுப்பாதையைத் தோற்றுவித்தார். இதனைப் பின்னால் வந்த ஸம்ஸ்க்ருத இலக்கியம் பின்பற்றியது. ஆயினும், பின்னைய நாடக ஆசிரியர்களுக்கு, பவபூதியின் திறனும் ஆழமும் இல்லை" என முடிவுரைக்கிறார்.

"பரஸ்பர அன்பால் பிணைக்கப்பட்ட தம்பதியர் உள்ளத்தில் எப்பொழுதும் இளமையோடு இருப்பர். முற்றிலும் மனம் ஒத்த தம்பதியருக்கு மௌனமாய் இருப்பதே போதும். ஏனெனில் ஒருவர் மற்றவருக்கு விலைமதிக்க வொண்ணாத நிதியாகியுள்ளார்" என்ற கருத்துடையவர் பவபூதி. இவரது இலக்கியக் கருத்துக்கள் தனித்தன்மை வாய்ந்தவை. அவை அவருடைய எழுத்தின் இயல்பை விளக்குகின்றன. இலக்கியக் கலையைப் பற்றிய எண்ணங்களில் அவருக்கு ஏற்பட்ட படிப்படியான வளர்ச்சியையும் காட்டுகின்றன.

ஓர் இலக்கிய ஆசிரியனை எப்படி அணுக வேண்டும் என்பதற்கு ஓர் உயரிய சான்று இந்நூல். நடுநிலை தவறாச் சான்றாண்மையுடன் படைக்கப்பட்டுள்ள இந்நூலுக்கு மற்றொரு சிறப்பு இறுதியில் அமையும் சார்பு நூல்களின் அட்டவணையாகும். பவபூதி படைப்புகளின் பதிப்புகள், ஆய்வுகள் முதலானவற்றை வரலாற்று நோக்கோடு அணுகவும், அறிந்து கொள்ளவும் மேலாய்வு செய்யவும் விழைவோர்க்குப் பெரும் பயனுடையது இவ்வட்டவணை. நூலாசிரியரின் உழைப்பும் ஆய்வும் ஆய்வாளரால் பாராட்டத்தக்கன.

– ச. சிவகாமி

Books Published Between June 1990 and December 1990

1. **Namakkal kavinar kavitaikal**

    Dr.K.R. Hanumanthan.

    P.N.150, Rs16/- Pages viii+116

Namakkal V. Ramalingam Pillai was a Patriot Poet who lived in Tamilnadu during the early decades of this century. His life and works were influenced by the freedom movement and Gandhian thought. These two aspects are well brought out in the present book by the revered History Professor Dr. K.R. Hanumanthan, who is also closely related to the renowned poet patriot.

2. **Tamilil ariviyal anrum inrum**

    Dr. N. Subbu Reddiar

    P.N. 151, Rs.25/-Pages viii + 188

A peep into the world of Science, its two phases, the ancient and the modern, forms this book. Various fields of science like Medicine, Agriculture, Technology, Astronomy, Space Science, Biology,Chemistry, Physics, Mathematics, Psychology and Education are dealt with in detail. The language is simple and the facts are clearly presented.

3. **Italalar Atittanar**

    Dr. A.M. Samy

    P.N. 152, Rs 26/=, Pages Vii + 194

This is the first lecture under 'Amarar Atittanar Endowment. He was a journalist of renown. The famous daily in Tamil, viz, 'Tinat tanti' was his brain child. The unceasing efforts taken by the veteran in bringing out this news paper and the strides and jumps with which it grew are explicitly given in this book by his disciple Dr. A.M.Samy.